தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை



(பதினைந்தாவது பேரவை)

மதிப்பீட்டுக் குழு

2018 – 2020

தொகுப்பு - II

18 முதல் 21 வரையிலான அறிக்கைகள்

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு
(2018 – 2020)

(பதினைந்தாவது பேரவை)

பதினெட்டாவது அறிக்கை

(பேரவைக்கு அளிக்கப் பெற்ற நாள் : 24 MAR 2020)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை – 600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு
(2018 – 2020)

(பதினைந்தாவது பேரவை)

பதினெட்டாவது அறிக்கை

"மருந்தகங்கள் மற்றும் மருத்துவமனைகள்" குறித்து மதிப்பீட்டுக் குழு (2003–2005) பேரவைக்கு அளித்த இருபத்தெட்டாவது அறிக்கையில் (பன்னிரெண்டாவது பேரவை) கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் மீதான அறிக்கை.

பொருளடக்கம்

		பக்கங்கள்
2018–2020 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் அமைப்பு	...	iii
I. முன்னுரை	...	v
II. அறிக்கை	...	vii
III. இணைப்புகள்		
இணைப்பு – 1 நிறைவேற்றப் பெற்றதாகக் கருதப்பெற்றவை		1–30
இணைப்பு – 2 துறையின் பதில்கள் குழுவால் ஏற்றுக் கொள்ளப் பெற்றவை		31–63
இணைப்பு – 3 குழு மேலும் தொடர விரும்புபவை		64–88

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு (2018–2020)

(பதினைந்தாவது பேரவை)

(5.7.2018–ஆம் நாள் அமைக்கப்பெற்று 31.03.2020 வரை நீட்டிக்கப்பட்டது)

தலைவர்

1. திரு. தோப்பு என்.டி. வெங்கடாச்சலம்

உறுப்பினர்கள்

2. மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்,
துணை முதலமைச்சர் (அலுவல் காரணமாக)
3. திரு. துரைமுருகன்,
தலைவர், பொதுக் கணக்குக் குழு (அலுவல் காரணமாக)
4. திரு. S. செம்மலை,
தலைவர், பொது நிறுவனங்கள் குழு (அலுவல் காரணமாக)
5. திரு. C.V. இராஜேந்திரன்
6. திரு. இ. கருணாநிதி
7. திரு. ஆர். காந்தி
8. திரு. V.S. காளிமுத்து
9. திருமதி ப. சத்யா
10. திரு. சி. சந்திரசேகரன்
11. திரு. எஸ்.எஸ். சரவணன்
12. திரு. M. செல்வராசு
13. திரு. அ. நடராஜன்
14. திரு. பெ. பெரியபுள்ளான் (எ) செல்வம்
15. முனைவர் க. பொன்முடி
16. திரு. கி. மாணிக்கம்
17. திரு. M.K. மோகன்
18. திரு. வி.ஜி. ராஜேந்திரன்
19. திரு. வாகை சந்திரசேகர்

செயலகம்

திரு. கி. சீனிவாசன் . . செயலாளர்
திரு. அ. அய்யன்பெருமாள் . . இணைச் செயலாளர்
திரு. க.லோ. சிவகுமரன் . . துணைச் செயலாளர்

I. முன்னுரை

1. "மருந்தகங்கள் மற்றும் மருத்துவமனைகள்" குறித்து மதிப்பீட்டுக் குழு (2003–2005) 4.4.2005–ஆம் நாளன்று பேரவைக்கு அளித்த இருபத்தெட்டாவது அறிக்கையில் (பன்னிரெண்டாவது பேரவை) உள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் மீதான பதினெட்டாவது அறிக்கையை மதிப்பீட்டுக் குழு (2018–2020) (பதினைந்தாவது பேரவை) அதிகாரம் அளித்தவாறு மதிப்பீட்டுக் குழுவின் தலைவராகிய நான் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

குழு 19.3.2020–ஆம் நாளன்று சென்னையில் கூடி மேலே பத்தி 1–இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கையில் அடங்கியுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கைப் பட்டியலை ஆய்வு செய்து இவ்வறிக்கைக்கு ஒப்புதல் அளித்தது.

குழுவின் பணிகளுக்கு பெரிதும் உதவிய சட்டமன்றப் பேரவைச் செயலாளர் அவர்களுக்கு குழு தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

சென்னை – 600 009,
நாள்: 19.3.2020.
விகாரி, பங்குனி–6,
திருவள்ளுவர் ஆண்டு–2051.

தோப்பு என்.டி. வெங்கடாச்சலம்,
தலைவர்,
மதிப்பீட்டுக் குழு.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

II. அறிக்கை

"மருந்தகங்கள் மற்றும் மருத்துவமனைகள்" குறித்து மதிப்பீட்டுக் குழு (2003–2005) பேரவைக்கு அளித்த இருபத்தெட்டாவது அறிக்கையில் (பன்னிரெண்டாவது பேரவை) கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் மீதான குழுவின் அறிக்கை.

*****

1. மதிப்பீட்டுக் குழு (2003–2005) பேரவைக்கு அளித்த இருபத்தெட்டாவது அறிக்கையில் (பன்னிரெண்டாவது பேரவை) கண்டுள்ள 132 பரிந்துரைகளில் 51 பரிந்துரைகள் அரசால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பெறுகின்றன. அவை இணைப்பு 1–இல் பட்டியலிடப்பெற்றுள்ளன. 48 பரிந்துரைகள் குறித்து அரசு அளித்துள்ள பதில்கள் குழுவால் ஏற்றுக்கொள்ளப் பெற்றிருக்கின்றன. இவை பற்றிய விவரங்கள் இணைப்பு 2–இல் பட்டியலிடப்பெற்றுள்ளன. 33 பரிந்துரைகள் மீது அரசு மேலும் நடவடிக்கை தொடர வேண்டுமென குழு முடிவு செய்துள்ளது. இவை பற்றிய விவரங்கள் இணைப்பு 3–இல் பட்டியலிடப்பெற்றுள்ளன.

2. இணைப்பு 3–இல் கண்டுள்ள குழு தொடர விரும்பும் பரிந்துரைகள் மீது துறை உரிய நடவடிக்கை எடுத்து 2 மாத காலத்திற்குள் விவர அறிக்கை அனுப்பப்படவேண்டுமென்று குழு விரும்புகிறது.

சென்னை – 600 009,
நாள்: 19.3.2020,
விகாரி, பங்குனி–6,
திருவள்ளுவர் ஆண்டு–2051.

தோப்பு என்.டி. வெங்கடாச்சலம்,
தலைவர்,
மதிப்பீட்டுக் குழு.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

III. இணைப்புகள்

இணைப்பு – 1

நிறைவேற்றப் பெற்றதாக கருதப்பெற்ற பரிந்துரைகள்

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
1	1	11	தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் மருத்துவர்களை உடனடியாக நியமிப்பதற்கு துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று துறையின் செயலாளர் குழுவிற்கு உறுதியளித்தவாறு தற்காலிக மருத்துவர்கள் 2005, பிப்ரவரி மாதத்திற்குள் நியமிக்கப்பட வேண்டும் என்றும் இதுகுறித்த அறிக்கை குழுவிற்கு அளிக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.	தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் மருத்துவர்களை நியமிப்பதற்கு முன்னதாகத் தமிழ்நாடு தேர்வாணைய குழு மூலமும் 2013–லிருந்து மருத்துவ சேவை தேர்வாணையர் குழு மூலம் பெறப்பட்ட பட்டியலின் படி மருத்துவ அலுவலர் பணி நியமனம் அளிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு 2006-2007 – 260 2007-2008 – 510 2008-2009 – 671 2009-2010 – 495 2010-2011 – 415 2011-2012 – 1101 2012-2013 – 127 2013-2014 – 3099 2014-2015 – 1538 2015-2016 – 584	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

2016-2017	1079
2017-2018	1303
2018-2019	1300

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
2	9	31	சுகாதாரக் கெடுதியை ஏற்படுத்தா வண்ணம் மருத்துவமனையின் தூய்மையினை கருதி, அனைத்து அரசு பொது மருத்துவமனைகளிலும் மாவட்ட மருத்துவமனைகளிலும் படிப்படியாக நீராவி சலவையகம் அமைக்கப்படுவதற்கு துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
இவ்வியக்கக கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அனைத்து மருத்துவமனைகளிலும் நீராவி சலவையகம் முறையாக அமைக்கப்பட்டு தகுந்த பணியாளர்களை கொண்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	இதுகுறித்து ஏற்கெனவே குழுவின் அறிக்கையில் குறிப்புரை வழங்கப்பட்டுள்ளதால் மேலும், பரிசீலிக்கத் தேவையில்லை எனக் குழு முடிவு செய்கிறது. எனவே, நிறைவேற்றப்பட்டதாகக் கருதலாம்.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
3	36	106	சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனை போன்ற மருத்துவமனைகளுக்கு கூடுதல் பராமரிப்பு நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்றும் பராமரிப்பு நிதியை உரிய வகையில் செலவு செய்வதற்கும் துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
தற்போது ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு மருத்துவக்கல்வி இயக்குநர் அவர்கள் இம்மருத்துவமனைக்கு ரூ.1,35,77,000/– 2210 – 01–110– AK – 1990 என்ற தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தற்போது இம்மருத்துவமனையில் உள்ள அனைத்து மருத்துவம் சார்ந்த மற்றும் மருத்துவம் சாரா உபகரணங்களும் ஒருங்கிணைந்த ஆண்டு பராமரிப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் பராமரிக்கப்பட்டு வருகிறது என்றும் அந்நிதியை தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம் மூலம் பெறப்பட்டு வருகிறது. மேலும், இப்பராமரிப்புக்கு நிதி ஏதேனும் தேவையிருப்பின் அரசு திருத்திய திட்ட மதிப்பீட்டில் ஆண்டுதோறும் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
4	38	114	கடலூர், அரசு மருத்துவமனையில் 3 முதன்மை குடிமை மருத்துவர்கள் மிக விரைவில் நியமிக்கப்பட வேண்டும் என்றும், கடலூர் மாவட்டத்தில் காலியாகவுள்ள 23 மருத்துவர் பணியிடங்களை நிரப்புவதற்கு துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
	கடலூர், அரசு தலைமை மருத்துவமனையில் 3 முதன்மை குடிமை மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.
	கடலூர் மாவட்டத்தில் காலியாக உள்ள 23 மருத்துவர் பணியிடங்கள் தற்போது நிரப்பப்பட்டுள்ளன என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
5	40	120	கடலூர், அரசு மருத்துவமனையில் காசநோயாளிகள் அதிகம் வருவதால் கூடுதல் படுக்கை வசதிகள் அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் இம்மருத்துவமனைக்கு உடனடியாக எக்ஸ்ரே கருவி வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
	கடலூர், அரசு தலைமை மருத்துவமனையில் காசநோயாளிகளுக்கென்று 8 படுக்கைகள் கொண்ட காசநோய் வார்டு செயல்பட்டு வருகிறது. கூடுதல் நோயாளிகள் வரும் பட்சத்தில் கடலூர் கேப்பர் மலையிலுள்ள காசநோய் சிறப்பு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்படுகின்றனர். காசநோய் பிரிவு அரசு மருத்துவமனை வளாகத்தில் அமைந்துள்ளதால் காசநோயாளிகள் எக்ஸ்ரே எடுப்பதற்கு அரசு மருத்துவமனையின் எக்ஸ்ரே பிரிவிற்கு அனுப்பப்படுகின்றனர். (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
6	41	122	கடலூர், அரசு மருத்துவமனையில் சுற்றுப்புறத்தினை தூய்மையாக பராமரிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும், நோயாளிகளிடம் பணம் பெறுவதைக் கண்காணிக்க மருத்துவத் துறையின் உயர் அதிகாரிகள் திடீர் சோதனைகள் மேற்கொண்டு ஆய்வு செய்ய வேண்டும் என்றும், இது குறித்து அனைத்து மருத்துவமனைகளுக்குப் உரிய அறிவுரைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் இதன் நகல் குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			கடலூர், அரசு தலைமை மருத்துவமனையில் சுற்றுப்புறத் தூய்மை செம்மையாக பராமரிக்கப்பட்டு வருகிறது. 2015 மற்றும் 2017–ஆம் ஆண்டுகளில் மருத்துவமனையை தூய்மையாக பராமரித்ததற்கான மாநில அளவிலான காயகல்ப் விருதினை பெற்றுள்ளது. ஊழியர்கள் நோயாளிகளிடம் பணம் பெறுவதை கண்காணிக்க உயர் அதிகாரிகள் மாதம் ஒரு முறை திடீர் சோதனைகள் மேற்கொண்டு ஆய்வு செய்துவருகின்றனர். மேலும் உள் மற்றும் வெளி நோயாளிகளிடம் கருத்து படிவம் (Patient Satisfaction Form) பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
7	43	129	செஞ்சி அரசு மருத்துவமனையில் காலியாக உள்ள அனைத்து மருத்துவப் பணியிடங்கள் நிரப்பப்படுவதற்கு முன்னுரிமை அடிப்படையில் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் இது குறித்த அறிக்கை விரைவில் குழுவிற்கு அனுப்பப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
	செஞ்சி அரசு மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட 17 மருத்துவப் பணியிடங்களில் தற்போது 15 மருத்துவ பணியிடங்கள் முழுமையாக நிரப்பப்பட்டு மருத்துவச் சிகிச்சை தொய்வில்லாமல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	துறையின் பதில் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டதாகக் கருதலாம்.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
8	44	132	செஞ்சி அரசு மருத்துவமனைக்கு குழந்தை சிகிச்சை பிரிவிற்கு பெண் மருத்துவர் ஒருவரை நியமிக்க துறையின் மூலம் விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
செஞ்சி அரசு மருத்துவமனையில் குழந்தைகள் நல மருத்துவப் பிரிவில் மருத்துவர் நியமிக்கப்பட்டு சிகிச்சைகள் சிறப்பாக அளிக்கப்பட்டு வருகிறது. தற்போது அம்மருத்துவப் பிரிவில் குழந்தை நல மருத்துவர் பணிபுரிந்து வருகிறார் என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
9	45	135	செஞ்சி அரசு வட்ட மருத்துவமனையில் விபத்து மற்றும் சிகிச்சைப் பிரிவினை ஏற்படுத்த துறை உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் எலும்பு முறிவு சிசிக்சை மருத்துவரை உடனடியாக நியமிப்பதற்கு துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
செஞ்சி அரசு மருத்துவமனையில் அவசர கவனிப்பு பிரிவு (6 படுக்கைகள்) ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் எலும்பு முறிவு மருத்துவர் இங்கு நியமிக்கப்பட்டு இதன் மூலம் அப்பகுதியில் விபத்தில் காயமுற்றோருக்கு மேற்குறிப்பிட்ட பிரிவின் மூலம் உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
10	46	137	செஞ்சி அரசு மருத்துவமனையில் நோயாளிகளின் எண்ணிக்கை அதிக அளவில் உள்ளதால் கூடுதலாக 30 படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்படுவதற்கு துறை உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
செஞ்சி அரசு மருத்துவமனையில் கூடுதலாக படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டு தற்போது 106 படுக்கைகளுடன் அப்பகுதி மக்களுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. . (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
11	48	142	திண்டிவனம் அரசு மருத்துவமனையின் பிணவறைக்கு ரூ.15.00 இலட்சம் செலவில் புதிய கட்டிடம் நவீன முறையில் கட்டப்பட வேண்டும் என்றும் இப்பணி விரைவில் முடிக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
திண்டிவனம் அரசு மருத்துவமனையில் பிணவறைக்கு புதிய கட்டிடம் 2007–2008–இல் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
12	49	145	திண்டிவனம் அரசு மருத்துவமனையில் பெண் நோயாளிகள் பிரிவில் கூடுதலாக 12 படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்படுவதற்கு துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			திண்டிவனம் அரசு மருத்துவமனை தற்போது 177 படுக்கைகளுடன் இயங்கிவருகிறது. இதில் பெண்களுக்கென தனியே பொது மருத்துவப் பிரிவு 12 படுக்கைகள்), (அறுவை சிகிச்சைப் பிரிவுகள்) (12 படுக்கைகள்) மகப்பேறு பிரிவுகள் (12 படுக்கைகள்) ஏற்படுத்தப்பட்டு சிறப்பான சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
13	50	148	திண்டிவனம் அரசு மருத்துவமனையில் நோயாளிகளின் அதிக எண்ணிக்கையைக் கருதி, மகப்பேறு சிகிச்சை பிரிவிற்கு 24 படுக்கைகளும் தொற்று நோய் சிகிச்சைப் பிரிவிற்கு 12 படுக்கைகளும் அமைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)	∞
திண்டிவனம் அரசு மருத்துவமனையில் மகப்பேறு சிகிச்சைப் பொருத்தமட்டில் சீமாங் பிரிவிற்கு 12 படுக்கைகளும் பிரசவ பின்கவனிப்பு பிரிவிற்கு 42 படுக்கைகளும் சேர்த்து 54 படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தொற்று நோய் சிகிச்சையைப் பொறுத்தவரையில் பருவகால நோய்கள் காலரா, காய்ச்சல் என தேவைக்கேற்ப தற்காலிகமாக தொற்றுநோய் சிகிச்சைப் பிரிவிற்கு 12 படுக்கை வசதிகளுக்கும் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.	

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
			(4)	(5)	(6)
14	54	159	சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மருத்துவமனையில் மருத்துவர் காலிப்பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் மேலும் மருத்துவமனைக்கு படுக்கைகள், தலையணைகள் மேஜை, நாற்காலி போன்ற வசதிகள் செய்வதற்கு துறையின் மூலம் விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.	சேலம் மாவட்டம், எடப்பாடி, அரசு மருத்துவமனையில் மொத்தம் 13 மருத்துவர்கள் பணியிடங்களில் 12 மருத்துவப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளது. மேலும் தற்சமயம் பல்மருத்துவர் பணியிடம் மட்டுமே காலியாக உள்ளது.அதனையும் அவ்வப்போது நடைபெறும் மாறுதல் கலந்தாய்வு நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது மேலும் மருத்துவமனைக்கு தேவையான படுக்கைகள், தலையணை மற்றும் மேஜை நாற்காலிகள் உள்ளன. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
			(4)	(5)	(6)
15	56	164	சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மருத்துவமனையில் மோசமான நிலையில் உள்ள பழைய கட்டிடத்தை இடித்து விட்டு புதிதாக பெரியதொரு கட்டிடம் எ.எஸ்.பி. திட்டத்தில் கட்டப்படுவதற்கு துறை உறுதியான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்றும் இது குறித்த அறிக்கை குழுவிற்கு அளிக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.	சேலம் மாவட்டம், எடப்பாடி, அரசு மருத்துவமனையில் மோசமான நிலையில் உள்ள பழைய கட்டடத்தை இடித்து விட்டு புதிதாக விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு, மகப்பேறு பிரிவு மற்றும் பிரேத பரிசோதனை கூடம் ஆகிய கட்டிடங்கள் கட்டப்பட்டு மார்ச் 2016 முதல் பயன்பாட்டில் உள்ளது என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
16	59	176	தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் நாய்க்கடி மருந்து பற்றாக்குறை இல்லாமல் நோயாளிகளுக்கு வழங்கப்படுவதற்கு துறை திடமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் இது குறித்து தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வருக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் மீண்டும் அவர் இதுபோன்ற தவறுகளைச் செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கடந்த 4 ஆண்டு காலங்களில் நாய்க்கடி மருந்து பற்றாக்குறை இல்லை. மேலும் நோயாளிகளுக்கு இடையூறு இல்லாமல் உரிய முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என்ற விவரத்தை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
17	63	186	திருநெல்வேலி மாவட்டம் சேரன்மகாதேவி மருத்துவமனைக்கு மருத்துவர் காலிப் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்பட வேண்டும் என்றும் இம்மருத்துவமனைக்கு சிமெண்ட் தளம் அமைக்கும் பணி விரைவில் முடிக்கப்படுவதற்கு துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
சேரன்மகாதேவி அரசு மருத்துவமனையின் அனைத்து மருத்துவர் பணியிடமும் முழுமையாக நிரப்பப்பட்டுள்ளது. மருத்துவமனை முழுமைக்கும் சிமெண்ட் தளம் அமைக்கப்பட்டுள்ளது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
18	65	190	சேரன்மகாதேவி அரசு மருத்துவமனையில் போதிய படுக்கை வசதிகளை ஏற்படுத்துவதற்கு துறையின் மூலம் விரைவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
சேரன்மகாதேவி அரசு மருத்துவமனை 32 படுக்கை வசதிகளுடன் 2016–ஆம் ஆண்டு முதல் கூடுதலாக 12 படுக்கை வசதிகள் புதிதாக உருவாக்கி தற்போது 44 படுக்கை வசதிகள் கொண்டவையாக உள்ளது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
19	68	195	பாளையங்கோட்டை அரசு மருத்துவமனையில் தேவைக்கேற்ப மேலும் கூடுதல் படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் சிறப்பு மருத்துவமனை அரசு ஆணை எண்.518/H&W/2018, நாள்.02.11.2018 பாரத பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் 27.11.2018 அன்று திறந்து வைக்கப்பட்டது. இம்மருத்துவமனை 330 படுக்கை வசதி கொண்ட நல்ல சிறப்பான முறையிலும் நோயாளிகள் பயன்பெறும் வகையிலும் செயல்பட்டு வருகிறது. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மொத்த படுக்கைகளின் எண்ணிக்கை 1717, சிறப்பு மருத்துவமனை கூடுதல் படுக்கை எண்ணிக்கை 330 மொத்தம் 2047 படுக்கைகள் உள்ளன. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
20	69	198	திருநெல்வேலி மாவட்டம் தென்காசி அரசு மருத்துவமனைக்கு தாமிரபரணி நீரை வழங்குவதற்கு ரூ.4.25 இலட்சத்தில் மேல்நிலைத் தொட்டி விரைவில் கட்டி முடிக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் தாமிரபரணி நீரை வழங்குவதற்கு ரூ.4.25 இலட்சத்தில் மேல்நிலை தொட்டி கட்டி முடிக்கப்பட்டு தற்பொழுது பயன்பாட்டில் உள்ளது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
21	70	200	தென்காசி அரசு மருத்துவமனையில் கூடுதல் படுக்கை வசதிகள் குறித்து துறை மூலம் ஆராயப்பட வேண்டும் என்றும் இது குறித்து விரைவில் நடவடிக்கை எடுக்கப் பெற வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் 2000–இல் 100 படுக்கை வசதிகள் கொண்ட புதிய அரசு மருத்துவமனை பின்னர் 2008 ஆம் ஆண்டு 256 படுக்கை வசதியாகவும் 2016–இல் 290 படுக்கை வசதியாகவும் 2019–இல் 338 படுக்கை வசதியாகவும் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
22	73	209	இராஜபாளையம் பி.ஏ.சி.இராமசாமி இராஜா அரசு மருத்துவமனைக்கு கூடுதலாக மயக்க மருந்து மருத்துவர் ஒருவரை நியமிக்க துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் அரசு மருத்துவமனையில் தற்போது நான்கு மருத்துவர்கள் பணியிடங்கள் கூடுதலாக ஒப்பளிப்பு செய்யப்பட்டு, அதில் ஒருபணியிடம் மயக்கவியல் மருத்துவர் பணியிடம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு அப்பணியிடத்தில் மயக்கவியல் மருத்துவர் பணியமர்த்தப்பட்டுள்ளார். (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
23	76	217	மதுரை மாவட்டம், அரசு இராஜாஜி மருத்துவமனையின் பழைய கட்டடத்தை சீர்செய்வதற்கும் மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்டப்படுவதற்கும் துறை சிறப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
மதுரை மாவட்டம், அரசு இராஜாஜி மருத்துவமனையில் பழைய கட்டிடங்களை சீர்செய்வதற்கும் ஆண்டுதோறும் பராமரிப்பு நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு அத்தியாவசிய பணிகளுக்கு முன்னுரிமை அளித்து பணிகள் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் அரசின் தன்னிறைவு திட்டத்தின் மூலம் கிடைக்கும் நிதி ஒதுக்கீட்டை கொண்டும் இம்மருத்துவமனையின் பழைய கட்டடங்கள் சீர் செய்யப்பட்டு வருகின்றது. தற்போது மத்திய – மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டில் ரூ.150 கோடி செலவில் இம்மருத்துவமனைக்கென Super Specialty Hospital – PMSSY கட்டிடம் மதுரை மருத்துவக்கல்லூரி வளாகத்தில் கட்டிடம் கட்டும் பணி விரைவில் திறக்கப்படும் தருவாயில் உள்ளது. மேலும் பாலரெங்கபுரம் அரசு மருத்துவமனை வளாகத்தில் புற்று நோய் சிகிச்சை மையக் கட்டிடம் ரூ.4 கோடி செலவில் கட்டப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
24	77	219	மதுரை அரசு பொது மருத்துவமனையை சுத்தமாக பராமரிப்பதற்கு முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் இது குறித்து அறிக்கை ஒன்று அளிக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
அரசு இராஜாஜி மருத்துவமனையில் தற்போது சுத்தம் மற்றும் சுகாதார பணிகள் மேற்கொள்வதற்காக புறஆதார அடிப்படையில் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு அனைத்து வார்டுகள் மற்றும் சுற்றுப்புற வளாகப் பகுதிகள் 24 மணி நேரமும் தூய்மைப்படுத்தப்பட்டு வருகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
25	78	221	மதுரை மருத்துவக் கல்லூரி பெண்கள் விடுதியை கட்டுவதற்கு நிதித் துறையுடன் கலந்தாய்வு செய்து துறையின் மூலம் சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குழுவிற்கு தெரிவிக்கப்படவேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
நிதித்துறையுடன் கலந்தாய்வு செய்து, பெண்கள் விடுதி 2008–2009 ஆம் நிதியாண்டில் கட்டி முடிக்கப்பட்டு தற்போது மருத்துவ மாணவியரின் பயன்பாட்டில் உள்ளது என தெரிவிக்கப்படுகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
26	79	224	கீரனூர் அரசு மருத்துவமனையில் முகப்பு கட்டிட பணிகள் உட்பட அறுவை சிகிச்சை வார்டு, ஐடி வார்டு, காலரா வார்டு போன்றவற்றிற்கு புதிய கட்டிடம் கட்டப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் இப்பணிகளை மேற்கொள்ள உலக வங்கி திட்டத்தின் கீழ் கூடுதல் நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.	கீரனூர் அரசு மருத்துவமனைக்கு உலக வங்கியின் நிதி ரூ.75.75 இலட்சத்தில் வெளிநோயளிகளின் பிரிவு, அறுவை சிகிச்சை வார்டு, ஐடி வார்டு, காலரா வார்டு போன்றவற்றிற்கு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
27	83	239	புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் அரசு மருத்துவமனையில் மருத்துவர் காலிப்பணியிடங்கள், செவிலியர் மற்றும் துப்புரவுப் பணியாளர் காலிப் பணியிடங்கள் அனைத்தும் விரைவில் நிரப்பப்படுவதற்கு துறை மூலம் பயனுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			இலுப்பூர் அரசு மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்டுள்ள 10 மருத்துவ பணியிடங்களில் 8 மருத்துவர்கள் தற்பொழுது பணிபுரிந்து வருகின்றனர். செவிலியர்கள் ஒப்பளிக்கப் பட்டுள்ள 10 பணியிடங்களில் 10 செவிலியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். தொகுப்பூதிய செவிலியர்கள் 8 பணியிடங்களில் 5 தொகுப்பூதிய செவிலியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். துப்புரவு பணியாளர்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ள 3 பணியிடங்களில் 3 துப்புரவு பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர் என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
28	84	242	புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் அரசு மருத்துவமனையில் பழைய கட்டடங்களை இடித்துவிட்டு எச்.எஸ்.டி.பி திட்டத்தின் கீழ் புதிய கட்டிடங்கள் கட்டப்படுவதற்கும் மருத்துவமனைக் கட்டிடங்களை சீர் செய்வதற்கும், உபகரணங்கள் வாங்குவதற்கும் கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டு விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
	புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் அரசு மருத்துவமனையானது அரசாணை எண்.71, நாள் 31.07.2015ன்படி வட்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு 54 படுக்கைகள் கொண்ட புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மேலும், கூடுதலாக உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. மற்றும் கட்டட பராமரிப்பு நிதியிலிருந்து பழைய கட்டிடங்கள் அனைத்தும் சீர் செய்யப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
29	88	253	புதுக்கோட்டை அரசு மருத்துவமனையின் மேம்பாட்டிற்காகவும் புதிய கட்டடம் கட்டுவதற்கும் புதுக்கோட்டை நகராட்சி ஒதுக்கியுள்ள நிலத்தினை வருவாய்த் துறையின் அனுமதி பெற்று புதிய கட்டிடங்கள் விரைவில் கட்டப்படுவதற்கு தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
அரசாணை எண். 342, நாள் 19.11.2015–இன்படி புதுக்கோட்டை அரசு தலைமை மருத்துவமனையானது அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு முள்ளூர் என்ற இடத்தில் புதிதாக கட்டடங்கள் கட்டப்பட்டு மருத்துவக்கல்வி இயக்ககத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
30	97	281	நன்னிலம் அரசு மருத்துவமனையின் பிணவறையை விரைவில் கட்டி முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
நன்னிலம் அரசு மருத்துவமனையில் பிணவறை கட்டி முடிக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
31	98	284	திருவாரூர் மாவட்டம், நன்னிலம் அரசு மருத்துவமனையில் மோசமான நிலையிலுள்ள பழைய கட்டடத்தை இடித்துவிட்டு புதிய கட்டடத்தை கட்டுவதற்கு துறை விரைவான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் இது குறித்து அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பவேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
நன்னிலம் அரசு மருத்துவமனையில் இருந்த பழைய கட்டடம் இடிக்கப்பட்டு 24 படுக்கைகள் மற்றும் வெளிநோயாளிகள் பிரிவு ரூ.115 இலட்சத்தில் தமிழ்நாடு சுகாதார திட்டத்தின்கீழ் புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
32	101	292	நாகப்பட்டினம் திருமருகல் மருத்துவமனையை தரம் உயர்த்துவதற்கு துறை மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் நிதியிலிருந்து சுற்றுச்சுவர் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
நாகப்பட்டினம் மாவட்டம் திருமருகல், ஊராட்சி ஒன்றியத்தில் திருமருகல் பிரதான/ ஆரம்ப சுகாதார நிலையம் அரசாணை எண்.142, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள் 30.04.2007–இன்படி மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அனைத்து வசதிகளுடன் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. திருமருகல் பிரதான/ மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தின் நான்கு புறமும் சுற்றுச்சுவர் கட்டப்பட்டு பாதுகாப்பாக உள்ளது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
33	102	294	நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி, சீர்காழி மற்றும் வைத்தீஸ்வரன் கோயில் மருத்துவமனைகளில் காலியாக உள்ள மருத்துவப் பணியிடங்கள் நடப்பு நிதி ஆண்டில் நிரப்பப்படுவதற்கு துறை நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
நாகப்பட்டினம் மாவட்டத்தில் தரங்கம்பாடி, சீர்காழி மற்றும் வைத்தீஸ்வரன் கோயில் மருத்துவ மனைகளில் மருத்துவப் பணியிடங்கள் நிரப்பப்பட்டு சிறப்பான மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
34	103	296	குத்தாலம் மற்றும் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைகளில் நியமனம் செய்யப்பட்ட பெண் மருத்துவர்கள் மாறுதல் செய்யப்படக்கூடாது என்றும் மாற்றுப்பணி மருத்துவர்கள் இம்மருத்துவமனை பணியில் சேர்ந்தால் மட்டும் இவர்களுக்கு மாறுதல் வழங்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள குத்தாலம் மற்றும் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைகளில் பெண் மருத்துவர் நிரப்பப்பட்டு சிறப்பான மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்		
(1)	(2)	(3)	(4)		
35	104	299	நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி அரசு மருத்துவமனை புறநோயாளிகள் பிரிவு குறித்த பணிகள் விரைவில் முடிக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.		
			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)	
			நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள சீர்காழி அரசு மருத்துவமனையில் புறநோயாளிகள் பிரிவு பணிகள் நிறைவு செய்யப்பட்டு மருத்துவமனைக்கு வரக்கூடிய புறநோயாளிகளுக்கு சிறப்பான மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.	
			(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)		

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்		
(1)	(2)	(3)	(4)		
36	105	301	மயிலாடுதுறை, சீர்காழி மற்றும் திருக்குவளை ஆகிய மருத்துவமனைகளில் குடும்ப நல அறுவை சிகிச்சை அரங்கு பணிகள் முடிக்கப்பெற்றது குறித்த அறிக்கை ஒன்றினை குழு பெற விரும்புகிறது.		
			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)	
			நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள மயிலாடுதுறை, சீர்காழி மற்றும் திருக்குவளை ஆகிய மருத்துவமனைகளில் குடும்ப நல அறுவை சிகிச்சை அரங்கு பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேலும் அறுவை சிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.	
			(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)		

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
37	106	305	தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வரும் நிதியாண்டில் புதிய கட்டடங்கள் சுமார் ரூ.50.00 கோடி செலவில் கட்டப்படுவதற்கு துறை மூலம் விரைவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
2003–2005 நிதி ஆண்டில் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சுமார் 50 கோடி (ஐம்பது கோடி) செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு போதிய உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு சிறந்த முறையில் சேவையாற்றி வருகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
38	107	309	தஞ்சாவூர் அரசு இராஜா மிராசுதார் மருத்துவமனையில் கூடுதல் கட்டடம் கட்டுவதற்கும் உபகரணங்கள் வாங்குவதற்கும் ஒப்புதல் வழங்கப்பட்டது குழுவிற்கு மகிழ்ச்சி அளிக்கிறது. இப்பணிகள் விரைவாக தொடங்கப்பட வேண்டும் என்றும் இது குறித்த அறிக்கை குழுவிற்கு அனுப்பப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
தஞ்சாவூர் அரசு இராஜா மிராசுதார் மருத்துவமனையில் கட்டப்பட்ட மேற்காணும் மகப்பேறு மற்றும் மகளிர் நோய் பிரிவிற்கான கட்டிடத்திற்கு தேவையான உபகரணங்கள் Tamil Nadu Health System Project–ல் இருந்து Tamilnadu Medical Service Corporation–க்கு ஆணை வழங்கப்பட்டு, Tamilnadu Medical Service Corporation நிறுவனத்தால் உரிய நிறுவனங்களுக்கு வழங்கலாணை வழங்கப்பட்டு உரிய நிறுவனங்களிடமிருந்து அனைத்து உபகரணங்களும் வரப்பெற்று மேற்படி மகப்பேறு கட்டடத்தில் நிறுவப்பட்டு, இயங்கி வருகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
39	108	311	தஞ்சாவூர் அரசு இராஜா மிராசுதார் மருத்துவமனையில் மகப்பேறு மற்றும் மகளிர் நோய் பிரிவிற்கான மூன்று தளங்களைக் கொண்ட கட்டிடம் ஒன்று கட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் வரும் நிதியாண்டில் இதற்கான ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் துவங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
தஞ்சாவூர் அரசு இராஜா மிராசுதார் மருத்துவமனையில் மகப்பேறு மற்றும் மகளிர் நோய் பிரிவிற்கான மூன்று தளங்களைக் கொண்ட (CEmONC) கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு அக்கட்டிடத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 30.12.2013 அன்று காணொலி காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டு அன்று முதல் செயல்பட்டு வருகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
40	109	314	(அ) திருச்சி மாவட்டம், லால்குடி அரசு மருத்துவமனைக்கு புதிய கட்டிடம் கட்டப்படுவதற்கும் உபகரணங்கள் வாங்கப்படுவதற்கும் முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. (ஆ) திருச்சி மாவட்டம், லால்குடி தொகுதி புள்ளம்பாடி ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கை வசதிகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்துவதற்கு முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் வரும் நிதியாண்டில் இது குறித்த பணிகள் துவங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			திருச்சி மாவட்டம் புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் புள்ளம்பாடி பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் அரசாணை எண்.142 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள்.30.04.2007–ன்படி 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக செயல்பட்டு வருகிறது. புள்ளம்பாடி மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் நாளொன்றுக்கு சராசரியாக 376 வெளிநோயாளிகளும் மாதமொன்றுக்கு சராசரியாக 148 உள்நோயாளிகளும் பயனடைகின்றனர். மாதமொன்றுக்கு சராசரியாக 12 பிரசவங்கள் நடைபெறுகிறது. மாதமொன்றுக்கு சராசரியாக 7 குடும்பநல அறுவை சிகிச்சைகள் நடைபெறுகின்றன. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
41	112	321	வால்பாறை மருத்துவமனைக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்டுள்ள பிரசவவார்டு மருத்துவர் குடியிருப்பு ஆகியவற்றை விரைவில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் மகப்பேறு வார்டில் மருத்துவ வசதிகள் முழுமையாக அளிக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
	வால்பாறை மருத்துவமனைக்கு ஏற்கெனவே செயல்பட்டு வந்த மகப்பேறு பிரிவு மற்றும் மகப்பேறு பின் கவனிப்பு பிரிவு நவீனப்படுத்தப்பட்டுள்ளது. SBGF மாநில சுகநிலை வளர்ச்சி நிதியின்கீழ் 2.75 கோடிகள் ஒதுக்கப்பட்டு அறுவை அரங்கம் பிரசவ வார்டு, பிரசவ பின் கவனிப்பு பிரிவு மருத்துவர், மருத்துவப் பணியாளர், குடியிருப்புகள், கட்டப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மகப்பேறு வார்டில் மருத்துவவசதிகள் முழுமையாக செயல்பாட்டில் உள்ளது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
42	114	326	வால்பாறைஅரசு மருத்துவமனை அமரர் ஊர்தி மற்றும் மூன்று வாகனங்களை நிறுத்துவதற்கு ஏற்ப வாகன கொட்டகை (ஷெட்) ஒன்று டி.ஆர்.டி.ஏ. பராமரிப்பு நிதியிலிருந்து இவ்வாண்டில் கட்டப்படுவதற்கு துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
வால்பாறை அரசு மருத்துவமனை அமரர் ஊர்தி மற்றும் வாகன நிறுத்தம் கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
43	116	331	கோயம்புத்தூர் அரசு மருத்துவமனையில் பழைய கட்டிடத்தை சீர் செய்வதற்கு விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் மகப்பேறு வார்டு, எலும்பு சிகிச்சை வார்டு அவசர சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றிற்கு வரும் நிதியாண்டில் புதிய கட்டிடங்கள் கட்டப்படுவதற்கு துறை மூலம் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பழைய கட்டிடங்கள் (18) இடிக்கப்பட்டு அவ்விடத்தில் புதிதாக நூற்றாண்டு விழா கட்டிடம் (Centenary Block) தோற்றுவிக்கும் பொருட்டு G.O.(Ms) No.350, H&FW (J1) Dept, dated 11.12.2010, G.O.(Ms).No.140, H&FW (J1) Dept, dated 26.05.2014 ஆகிய அரசாணைகள் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டு கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது. அக்கட்டிடத்தில் 15 அறுவை சிகிச்சை அரங்குகளுடனும், ICU. IMCU, அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் Step down ஆகியவற்றில் 600 படுக்கை வசதிகளுடனும் அதில் எலும்பு முறிவு பிரிவிற்கு என தனியாக 4 அதி நவீன அறுவை சிகிச்சை அரங்குகளும் பிரத்தியேகமாக 150 படுக்கை வசதிகளும் செய்யப்பட்டு இயங்கி வருகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
44	117	333	கோயம்புத்தூர் அரசு மருத்துவமனையில் நோயாளிகளின் அதிக எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு கூடுதல் படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை 109 ஆண்டு கால பழமை வாய்ந்த அதிநவீன வசதிகளைக் கொண்ட மருத்துவமனை ஆகும். கோவை மாவட்ட மக்களுக்கு மட்டுமின்றி அருகாமையில் உள்ள 6 மாவட்டங்களிலிருந்து வரும் நோயாளிகளுக்கும் அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகாவிலிருந்து வரும் நோயாளிகளுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு சிறந்ததொரு மருத்துவமனையாக விளங்கி வருகிறது. இம்மருத்துவமனையில் தினமும் வெளிநோயாளிகள் பிரிவில் 6000 பேர் சிகிச்சைக்காக வருகின்றனர். மேலும் சராசரியாக 1600 முதல் 1800 பேர் வரை உள்நோயாளியாக சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இதைத் தவிர டெங்கு, பன்றிக் காய்ச்சல் மற்றும் விபத்து போன்ற அவசர காலங்களில் நோயாளிகளுக்கு கூடுதலாக படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. எனவே, எந்த நோயாளிக்கும் படுக்கை வசதி இல்லை என்று கூறுவதற்கு வாய்ப்பு இல்லை எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. தற்பொழுது மேலும் கூடுதலாக 1118 படுக்கை வசதிகளுடன் சேர்த்து மொத்தம் 2300 படுக்கை வசதிகள் இந்திய மருத்துவ கவுன்சிலின் விதிகளின்படி ஒப்பளிப்பு செய்யப்பட்டு ஏழை எளிய மக்களின் உபயோகத்திற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
45	119	339	கோயம்புத்தூர் அரசு மருத்துவமனையில் இருதய அறுவை சிகிச்சை மற்றும் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்வது குறித்து ஆராயப்பட வேண்டும் என்றும் இது குறித்த அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்
(5)

குழுவின் குறிப்புரை
(6)

நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

இம்மருத்துவமனையில் 2017 செப்டம்பர் மாதத்திலிருந்து திறந்த நிலை இருதய அறுவை சிகிச்சை (Open Heart Surgery) செய்யப்பட்டு இதுவரை (04.05.2019 வரை) 91 Open Heart Surgery (Heart Valve Replacement Surgery–25, Coronary Artery Bypass Grafting–48, intra Cardiac Tumour Excision– 3, Congenital Heart Surgeries-15) செய்யப்பட்டுள்ளன.

இதன் காரணமாக கோவை, நீலகிரி, ஈரோடு, சேலம் ஆகிய மாவட்டங்களிலிருந்து நோயாளிகள் பயன்பெற்று வருகின்றனர். மேலும், இம்மருத்துவமனைக்கு தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் மூலம் இருதய நோய் துறைக்கு ஆஞ்சியோ உபகரணம் வரப்பெற்று பொதுமக்களின் பயன்பாட்டிற்காக 31.03.2018 முதல் நல்ல முறையில் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரையில் (மார்ச் 2019) 1304 நோயாளிகளுக்கு ஆஞ்சியோகிராம் எடுக்கப்பட்டுள்ளது. மேலும் 508 நோயாளிகளுக்கு ஆஞ்சியோபிளாஸ்ட் செய்யப்பட்டுள்ளது. இம்மருத்துவமனையில் Cardio cathlab–ல் மேற்கொள்ளப்பட்ட சிகிச்சை விவரம் பின்வருமாறு:

Month	Angio Plasty (Major)	Angiogram (Minor)
February 2018	8	45
March 2018	17	38
April 2018	18	52
May 2018	38	109
June 2018	31	106
July 2018	26	121
August 2018	26	101
September 2018	40	109
October 2018	44	126
November 2018	50	96
December 2018	44	126
January 2019	58	124
February 2019	55	136
March 2019	53	128

இம்மருத்துவமனைக்கு தமிழ்நாடு மருத்துவ சேவைக்கழகம் மூலம் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை கருவிகள் கொள்முதல் செய்யப்பட்டு இதுவரை 20 நபர்களுக்கு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இம்மருத்துவமனையில் அறுவை சிகிச்சை இல்லாமல், சிறுநீரகக் கற்களை அகற்றுவதற்கு TNMSC மூலமாக, Extracorporeal shock wave lithotripsy (ESWL) ரூ.2.5 கோடிக்கு வழங்கப்பட்டு, இதுவரை (மார்ச் 2019) 338 நபர்களுக்கு சிறுநீரகக் கற்கள் அகற்றப்பட்டுள்ளன. அதேபோல் அம்மருத்துவமனையில் 8 Dialysis மெஷின்கள் இருந்தன. தற்போது, 20 Dialysis மெஷின்கள் வாங்கப்பட்டு கீழ்கண்டவாறு நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

வ. எண்	ஆண்டு	பயன்பெற்ற நோயளிகளின் எண்ணிக்கை
1	2016	3738
2	2017	5594
3	2018	6761
4	மார்ச் 2019 வரை	748

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
46	123	348	கோட்டூர் அரசு மருத்துவமனைக்கு பெண் மருத்துவர்கள் விரைவில் நியமிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
கோட்டூர் அரசு மருத்துவமனைக்கு அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்ட 4 மருத்துவர் பணியிடங்களும் மருத்துவர் நியமனம் செய்யப்பட்டு பணியில் உள்ளனர். அதில் ஒரு பெண் மருத்துவரும் 05.07.2019 முதல் பணிபுரிந்து வருகின்றார் என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
47	125	354	கோயம்புத்தூர் மாவட்டம், வேட்டைக்காரன்புதூர் அரசு மருத்துவமனையில் மருத்துவமனைகள் மேம்பாட்டுத்திட்டம் இரண்டாம் கட்டப்பணியில் புதிய கட்டிட வசதி, பழுதடைந்த கட்டிடங்களை புதுப்பித்தல் உபகரணங்கள் ஆகியவை அமைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
வேட்டைக்காரன் புதூர் அரசு மருத்துவமனையில் பழுதடைந்த கட்டிடங்களை பராமரிக்க இவ்வியக்கக கட்டடம் பராமரிப்பு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பராமரிப்புபணிகள் மேற்கொள்ளப்பட்டு விட்டன என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
48	128	361	தக்கலை, அரசு மருத்துவமனைக்கு குழு கோரியவாறு முதல் மாடி கட்டிடம் கட்டப்படுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் எச்.எஸ்.டி.பி.திட்டத்தின் கீழ் இம்மருத்துவமனைக்குத் தேவையான உபகரணங்கள் வாங்குவதற்கும் கூடுதல் நிதி ஒதுக்கப்படவேண்டும் என்றும் இது குறித்த அறிக்கை குழுவிற்கு அனுப்பப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
	கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை அரசு மாவட்ட தலைமை மருத்துவனையில் முதல் மாடிகட்டிடம் 30 லட்சம் செலவில் NRHM Fund மூலமும் 2வது மாடி ரூ.1.60 கோடி செலவில் TNHSP Fund மூலம் கட்டப்பட்டு கட்டிடத்திற்கு தேவையான உபகரணங்கள் NRHM Fund மற்றும் TNHSP மூலம் வழங்கப்பட்டு நன்முறையில் இயங்கி வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் கருக்கம் (4)
49	129	362	தக்கலை அரசு மருத்துவமனையில் சி.டி. ஸ்கேன், எக்ஸ்ரே கருவிகள் போன்றவற்றிற்கு இடம் இல்லாததாலும் கூடுதல் படுக்கை வசதிகள் தேவைப்படுவதாலும் எச்.எஸ்.டி.பி திட்டத்தின் கீழ் தனியாக ஒரு கட்டடம் கட்டப்படுவதற்கு துறையின் மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் இது குறித்து அறிக்கையொன்று அனுப்பப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
	கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை அரசு மாவட்ட தலைமை மருத்துவனையில் சி.டிஸ்கேனுக்கு TNHSP Fund மூலம் 8 லட்சம் செலவில் தனியாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மருத்துவக் கல்லூரியிலிருந்து Transfer செய்யப்பட்ட 4 slice CT Scan நல்ல முறையில் இயங்கி வருகிறது. X-Ray கருவிகள் Trauma Care கட்டிடத்தில் தனியாக அறையில் நல்ல முறையில் இயங்கி வருகிறது. TNHSP Fund மூலம் 1.60 கோடி செலவில் இரண்டாவது மாடி கட்டப்பட்டு கூடுதலாக 46 படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
50	131	366	அருமனை மற்றும் குலசேகரம் மருத்துவமனைகளுக்கு பெண் மருத்துவர்கள் விரைவில் நியமிக்கப்பட வேண்டும் என்றும் அருமனை, அரசு மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை அரங்கம் செயல்படுவதற்கு துறை மூலம் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
கன்னியாகுமரி மாவட்டம், அரசு மருத்துவனை, அருமனை மற்றும் அரசு மருத்துவமனை குலசேகரத்தில் தலா இரண்டு பெண் மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இரண்டு மருத்துவமனைகளிலும் அறுவை அரங்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
51	132	368	கன்னியாகுமரி மாவட்டத்தில் குழித்துறை, தக்கலை போன்ற இடங்களில் உள்ள மருத்துவமனைகளில் எக்ஸ்ரே ஆப்ரேட்டர்களை அவசரத் தன்மையைக் கருதி வெளியிலிருந்து ஆப்ரேட்டர்களை நியமனம் செய்வது குறித்து மருத்துவ அலுவலர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்படவேண்டும் எனறும் இது குறித்து விரைவான நடவடிக்கைகள் துறை மூலம் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை, அரசு மருத்துவமனை மற்றும் தக்கலை அரசு மாவட்ட தலைமை மருத்துவனையில் நுண்கதிர் வீச்சாளர் பணியிடம் நிரப்பப்பட்டு நுண்கதிர் வீச்சாளர் பணிபுரிந்து வருகிறார்கள்.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

இணைப்பு – 2

துறையின் பதில்கள் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பெற்றவை

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
1	2	12	அவசர கால மகப்பேறு மற்றும் மகவு காப்பு மையங்களுக்கு பெண் மருத்துவர்கள் உடனடியாக நியமிக்கப்பட வேண்டும் என்றும் தற்காலிக மருத்துவர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்படுவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.	அவசர கால மகப்பேறு மற்றும் மகவு காப்பு மையங்களில் மருத்துவ அலுவலர் பணியிடங்கள் கலந்தாய்வின்போது பெண் மருத்துவருக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு நிரப்பப்பட்டு வருகிறது. மேலும் மருத்துவ அலுவலர் பணியிடங்கள் மருத்துவ தேர்வாணையக் குழு மூலமான சிறப்பு மருத்துவர் தெரிவு செய்வதன் மூலமும் (walk-in selection) மற்றும் மருத்துவக் கல்வி இயக்ககம் வாயிலாக பெறப்படும் பணிசாரா பட்டதாரிகள் பட்டியல் அடிப்படையிலும் நிரப்பப்பட்டு வருகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.
2	3	15	அரசு மருத்துவமனைகளில் உள்ள செவிலியர் காலிப் பணியிடங்களை உடனுக்குடன் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் 128 செவிலியர் பணியிடங்கள் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் தேவைக்கேற்ப மருத்துவமனைகளில் கூடுதலாக செவிலியர் நியமிக்க பயனுள்ள முயற்சிகள் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இது குறித்து விரைவில் குழுவிற்கு அறிக்கையொன்று அளிக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.		

			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			இவ்வியக்கக கட்டுப்பாட்டிலுள்ள அரசு மருத்துவமனைகளுக்கு அரசால் ஒப்பளிக்கப்பட்ட 5,946 நிரந்தர செவிலியர் பணியிடங்களில் 5672 செவிலியர்கள் பணியில் உள்ளனர். தற்காலிக செவிலியர் 2,544 பணியிடங்களில் 2062 பணியிடங்களில் செவிலியர்கள் பணியில் உள்ளனர் என்பதை அரசுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் அவ்வப்போது ஏற்படும் காலிப் பணியிடங்கள் மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்படுகின்றனர்.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
3	4	18	மலைப்பிரதேசங்களில் கிராமப்புறங்களிலும் உள்ள அரசு மருத்துவமனைகளில் நியமனம் செய்யப்படும் மருத்துவர்கள் மற்றும் பெண் மருத்துவர்கள் குறைந்தது ஒரு ஆண்டு காலமாவது கண்டிப்பாக பணிபுரிய வேண்டும் என்றும் ஒரு ஆண்டிற்குப் பிறகு அவர்கள் மாற்றம் செய்யப்பட்டால் அப்பணியிடங்களில் மாற்று மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு பணியில் சேர்ந்த பின்பு தான் ஏற்கெனவே பணிபுரியும் மருத்துவர்கள் மற்றும் பெண் மருத்துவர்கள் அப்பணியிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
	அரசு விதிகளின்படி மாறுதல் கோருவதற்கு குறைந்தபட்சம் ஓராண்டு நிறைவு பெற்றிருக்க வேண்டும். மலைப்பிரதேசங்களில் பணிபுரிபவர்கள் மாறுதல் பெற்ற பிறகு மாற்று மருத்துவர்கள் வந்தால் மட்டுமே பணியிலிருந்து விடுவிக்கப்படுவர். தற்போது வரை இத்தகைய நடைமுறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
4	5	19	புதிதாக நியமிக்கப்படும் மருத்துவர்கள், மலைப்பிரதேசங்களில் அல்லது கிராமப்புறங்களில் குறைந்தது 3 வருடங்கள் பணிபுரிய வேண்டும் என்பது கட்டாயப்படுத்தப்பட வேண்டும் என்றும் மருத்துவர் பதவி உயர்விற்கு இத்தகைய கிராமப்புற மற்றும் மலைப்பிரதேச மருத்துவப் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் தேவையிருப்பின் இதுகுறித்து சட்ட திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
	புதிதாக நியமிக்கப்படும் மருத்துவர்களுக்கு அளிக்கப்படும் பணிநியமன ஆணையிலேயே மூன்று ஆண்டுகள் பணிபுரிய வேண்டும் என்று குறிப்பிடப்படுகிறது. மேலும் கிராமப்புறம் மற்றும் மலைப்பிரதேச மருத்துவப் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கும் விதமாக அங்கு பணிபுரியும் மருத்துவர்களுக்கு பட்ட மேற்படிப்பிற்குச் செல்லும்போது அதிகபட்சம் 30% வரை கீழே குறிப்பிட்டுள்ளபடி ஊக்க மதிப்பெண்கள் வழங்கப்படுகின்றன:- மலைப்பிரதேசங்களில் உள்ள கடினமான பகுதிகள் ஆண்டிற்கு - 10 % மதிப்பெண்கள். சமவெளிகளில் உள்ள கடினமான பகுதிகள் அவற்றிற்கு - 9% மதிப்பெண்கள். நெடுந்தொலைவிலுள்ள பகுதிகள் - 8 % மதிப்பெண்கள். ஊரகப் பகுதிகள் - 5 % மதிப்பெண்கள் (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016-6, நாள் 29.10.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
5	7	27	அரசு பொது மருத்துவமனைகள், வட்ட மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருத்துவமனைப் பிரிவுகள் ஆகியவற்றின் அனைத்து பராமரிப்பு பணிகளுக்கும், மருத்துவமனை கட்டிடங்கள் கட்டுதல், உபகரணங்களை சரிசெய்தல் மற்றும் மின்சார பணிகளுக்கும் பணிகளை திட்டமிட்டு விரைவாகவும் திறமையாகவும் செய்துமுடிக்கும் வகையில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை கட்டுப்பாட்டின் கீழ் மருத்துவமனை பராமரிப்புக்கழகம் ஒன்று தனியாக உருவாக்கப்பட வேண்டும் என்றும் இக்கழகத்திற்கு என்று மூல நிதி ஒதுக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் செயலாளர், நிதித்துறையுடன் கலந்தாலோசித்து இக்கழகத்திற்கு தனியாக நிதி ஆண்டு தோறும் ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
இவ்வியக்ககத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகளை பராமரிக்க கட்டடம் மற்றும் பராமரிப்புபணிகள் நிதியின் கீழ் 2017-2018 நிதியாண்டில் ரூ.25.00 கோடியும் 2018–2019 நிதியாண்டில் ரூ.28.00 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அனைத்து அரசு மருத்துவமனை பராமரிக்க பொதுப்பணித் துறை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மருத்துவமனைகள் பராமரிக்கப்பட்டன. மேலும் தற்போது 2019–2020 நிதியாண்டில் ரூ.28.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தற்போதுவரை ரூ.16.65 கோடி அனைத்து அரசு மருத்துவமனைகளை பராமரிக்க நிதி விடுவிக்கப்பட்டு பொதுப்பணித் துறையின் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	அரசு கட்டடங்களை பராமரிக்கும் பணி பொதுப்பணித் (கட்டடங்கள்) துறையை சார்ந்ததே ஆகும். எனவே, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் மூலம் கட்டடங்கள் பராமரிப்பு புதியதாக கூடுதல் கட்டடங்கள் கட்டுதல் குறித்து கருத்துரு உரிய பரிசீலனை செய்த பின்பு துறையிடமிருந்து பொதுப்பணித்துறை (மருத்துவ கட்டடங்கள்) அலகிற்கு அனுப்பிவைக்கப்படும். பொதுப்பணித் துறை (மருத்துவ கட்டடங்கள்) அலகு செயல்படுத்தும் துறை (Implementing Department) என்கிற அடிப்படையில் மேற்படி பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே துறையின் பதில் ஏற்றுக்கொள்ளப்பெறலாம்.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
6	8	29	அரசு மருத்துவமனைகளில் பராமரிப்பு நிதி உரிய காலத்திற்குள் தகுதியான இனங்களுக்கு செலவு செய்யப்பட உரிய அறிவுரைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் அந்தந்த நிதி ஆண்டிற்குள் பராமரிப்பு நிதி செலவு செய்யப்படாவிட்டால் அதற்கான காரணங்கள் ஆராயப்பட வேண்டும் என்றும் தவறு செய்யும் அலுவலர்கள் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்பட வேண்டும்

			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			ஆண்டுதோறும் அரசால் கட்டடங்கள் (பராமரிப்பு மற்றும் செப்பனிடுதல்) போன்றவற்றிற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட நிதி மருத்துவ நிலையங்களிலிருந்து பெறப்படும் Priority list படி Civil Works மற்றும் Electrical Works என பிரித்து வழங்கப்படுகிறது. மேலும் இந்நிதி தலைமைப் பொறியாளர், பொது பணித் துறையினர் மூலம் வழங்கப்படுகிறது. அந்தந்த நிதி ஆண்டிற்குள் பராமரிப்பு நிதி செலவு செய்யப்படாவிட்டால் அதற்கான காரணங்கள் ஆராயப்பட வேண்டும் என்றும் தவறு செய்யும் அலுவலர்கள் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
7	10	33	அரசு மருத்துவமனைகளில் 95 அறுவை சிகிச்சை அரங்குகள் குளிர்சாதன வசதி செய்யப்படுவதற்கு முன்னுரிமை அடிப்படையில் கூடுதல் நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்றும் இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள் அனைத்து அறுவை சிகிச்சை அரங்குகளுக்கும் குளிர்சாதன வசதி செய்யப்படும் வகையில் தீவிர நடவடிக்கைகள் துறை மூலம் எடுக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

		துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
		மருத்துவக் கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ நிலையங்களில் அனைத்து அறுவை அரங்குகளும் குளிர்சாதன வசதி செய்யப்பட்டுள்ளது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
8	11	35	அரசு மருத்துவமனைகளில் குளிர்சாதன வசதி செயல்படவில்லை என்றால் ஒரு மாத காலத்திற்குள் அச்சாதனம் செயல்படுவதற்கு இணை இயக்குநர் அளவில் இவ்விஷயம் கொண்டு செல்லப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் பராமரிப்பு நிதியிலிருந்து செலவிடப்படுவதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் இத்தகைய நேர்வுகளில் அதிக காலம் தாழ்ந்தும் மருத்துவ அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

			துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
			(5)	(6)
			அரசு மருத்துவமனைகளில் குளிர்சாதன வசதி செயல்படவில்லை என்ற தகவல் பெறப்பட்டவுடன் பொதுப்பணி துறையின் மூலம் பராமரிப்பு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உடனே மேற்கண்ட குறைகள் நிவர்த்தி செய்யப்படுகின்றன. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
9	12	37	அரசு மருத்துவமனைகளில் மின் உற்பத்தி இயந்திரங்கள் செயல்படாத நிலை ஏற்படுமாயின் பராமரிப்பு நிதியிலிருந்து உடனடியாக அப்பணி மேற்கொள்ளப்பட வேண்டும் இது குறித்து உரிய அறிவுரைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

			துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
			(5)	(6)
			ஆண்டுதோறும் அரசால் கட்டடங்கள் (பராமரிப்பு மற்றும் செப்பனிடுதல்) போன்றவற்றிக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட நிதி மருத்துவ நிலையங்களிலிருந்து பெறப்படும் Priority list படி Civil works மற்றும் Electrical works என பிரித்து வழங்கப்படுகிறது. மேலும் இந்நிதி தலைமைப் பொறியாளர், பொது பணித்துறையினர் மூலம் வழங்கப்படுகிறது. மேலும் மின்உற்பத்தி இயந்திரங்கள் பராமரிப்புக்கு ஆண்டு பராமரிப்பு நிதி (Annual Maintenance Charge) ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
10	13	39	தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைப் பகுதிகளில் ஏற்படும் வாகன விபத்துக்கள் மற்றும் அவசர சிகிச்சை ஆகியவற்றிக்காக குழு கோரியவாறு செஞ்சி அரசு மருத்துவமனையிலும் மாவட்டம் தோறும் முக்கிய பகுதிகளிலும் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகள் அமைக்கப்படுவதற்கு துறை மூலம் உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் உலக வங்கி நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் மருத்துவமனை மேம்பாட்டுத் திட்டத்தின் நிதி இப்பிரிவுகளுக்கு கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அரசு மருத்துவமனை 106 படுக்கை வசதிகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இங்கு வெளிநோயாளிகள் 980 பேரும், உள்நோயாளிகள் நாளொன்றுக்கு 70 பேரும், 30 பிரசவங்கள் மாதத்திற்கும், ஆய்வக பரிசோதனை 11333, இங்கு விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவிற்காக 6 படுக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இங்கு மாதம் ஒன்றுக்கு சராசரியாக சாலை விபத்தால் காயமடைந்த 150 நபர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேலும் இவ்வியக்கக கட்டுப்பாட்டில் 46 அரசு மருத்துவமனைகளில் முழு அளவில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. மேலும் 55 அரசு மருத்துவமனைகளில் தலைக்காய சிகிச்சை பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
11	14	42	அரசு மருத்துவமனையில் உள்ள அவசர ஊர்திகள் / அமரர் ஊர்திகளுக்கு அவ்வப்போது பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுதில்லை என்பதாலும், ஓட்டுநர்களோடு புதிய வாகனங்கள் அரசு மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதாலும் செயலாளர் அளவில் இதுகுறித்து ஆய்வு செய்யப்பட வேண்டும் என்றும் தற்போது காலியாக உள்ள 98 ஓட்டுநர் காலிப் பணியிடங்கள் மிக விரைவில் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
இவ்வியக்கக கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அரசு மருத்துவமனைகளில் பயன்பாட்டில் இருந்த அவசரகால ஊர்திகள் மற்றும் அமரர் ஊர்திகள் அனைத்தும் 2012 முதல் தமிழ்நாடு சுகாதார திட்டத்திடம் ஒப்படைக்கப்பட்டு அவர்களின் மூலம் GVK-EMRI என்ற நிறுவனத்திடம் செயல்பாட்டில் இருந்து வருவதுடன் அவர்கள் மூலமே பராமரிக்கப்பட்டு வருவதுடன் அவசர கால ஊர்திகளில் ஓட்டுநர் பணியிடமும் அந்நிறுவனம் மூலமே நிரப்பப்பட்டு வருகிறது.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
12	16	48	மார்பக புற்றுநோயை கண்டறியும் மாமோகிராபி சாதனம் மருத்துவமனைகளில் அமைக்கப்படுவதற்கு கோபால்ட் தெரபி சாதனமும் நிறுவப்பட வேண்டும் என்பதால் சாதனங்களை அதிக எண்ணிக்கையில் பொதுமக்கள் சிகிச்சை பெறும் அரசு பொது மருத்துவமனைகளில் நிறுவுவதற்கும் மத்திய அரசின் நிதியை பெறுவதற்கும் விரைவான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
மார்பக புற்றுநோயை கண்டறிய மாமோகிராபி சாதனம் இணைப்பு (1) ல் குறிப்பிட்டுள்ள படி அனைத்து மருத்துவமனைகளில் அமைக்கப்பட்டு மருத்துவமனைகளில் வரும் நோயாளிகளுக்கு சிறப்பான முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் இணைப்பு (2)ல் குறிப்பிட்டுள்ள மருத்துவமனைகளில் கோபால்ட் தெரபி சாதனமும் நிறுவப்பட்டு நோயாளிகளுக்கு சிறப்பான முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. ஒமந்தூரார் பன்நோக்கு சிறப்பு மருத்துவமனைகளில் புதிய நேரியியல் தெரபி (Linear Accelerator) உள்ளது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
13	22	65	தமிழ்நாட்டில் பால்வினை நோயை தடுப்பதற்கு பாமரமக்களும் அறியும் வகையில் வானொலி, தொலைக்காட்சி, பத்திரிக்கை ஆகியவற்றில் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதிக விளம்பரங்கள் செய்யப்பட வேண்டும். மேலும், பால்வினை நோயாளிகளின் சரியான புள்ளி விவரங்களைப் பெறுவதற்கு துறை மாவட்டந்தோறும் அதிகமான விழிப்புணர்வு முகாம்களை நடத்துவதற்கு சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
	தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் சார்பாக பால்வினை நோயை தடுப்பது பற்றி, பாமரமக்களும் அறியும் வகையில் மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாடு அலகுகளின் வாயிலாக வானொலியின் மூலம் விழிப்புணர்வு சேவைகள் ஒளிபரப்பப்பட்டுள்ளது. மேலும், 1800 419 1800 என்ற கட்டணமில்லா இலவச தொலைபேசியின் மூலமாக மாவட்ட அளவில் பால்வினை நோய் தொற்று மையங்கள், அவற்றின் சேவைகள் பற்றி பாமரமக்களும் அறியும் வண்ணம் தகவல்கள் அளிக்கப்படுகின்றது. மேலும், இந்த நிதியாண்டில் தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு நிறுவனத்தின் மூலம் பால்வினை நோய் குறித்து வானொலி, தொலைக்காட்சி, பத்திரிக்கை ஆகியவற்றின் மூலம் விழிப்புணர்வு செய்வதற்காக கூடுதல் நிதி கோரப்பட்டுள்ளது.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
14	27	77	வெளி மாநிலத்தில் தயாரிக்கப்பட்டு தமிழ்நாட்டில் விற்கப்படும் தரமற்ற மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டால் ஏற்கெனவே விற்கப்பட்டு மருந்து கடைகளுக்கு வழங்கப்பட்ட தரமற்ற மருந்துகளை தடை செய்வதற்கு மருந்து கட்டுப்பாடு இயக்குநரகம் உரிய அறிவுரைகள் வழங்கி நடவடிக்கை எடுத்தாலும் இப்பணியை உடனடியாகவும் பயன் உள்ள வகையிலும் செயல்படுத்துவதற்கு மருந்து கட்டுப்பாடு இயக்குநரகம் மருத்துவத் துறையில் திறமையான மற்றும் கட்டுப்பாடுள்ள பணியாளர்களைக் கொண்ட ஒரு அமைப்பாக உருவாக்கப்பட வேண்டும் என்றும் இது குறித்து கூடுதல் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும் என்றும் இதுகுறித்து நிதித் துறையின் ஒப்புதல் பெற்று துறையின் செயலாளர் தீவிர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
மருந்து தயாரிக்கும் நிறுவனங்களே மருந்தின் தரத்தினை ஆய்வுக்கு உட்படுத்திய பின்னர் தான் விற்பனைக்கு வருகிறது. மேலும் மருந்தின் தன்மை தட்ப வெப்பநிலைக்கு ஏற்றவாறு தாம் மாறும் பட்சத்தில் ஆய்வாளர்கள் மருந்து மாதிரி எடுத்து பரிசோதனைக்காக அரசு பகுப்பாய்வுக் கூடத்திற்கு அனுப்பப்படுகிறது. அறிக்கையின் அடிப்படையில், தரமற்ற மருந்து என்று தெரியும் தருவாயில் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. புதிதாக 89 மருந்து ஆய்வாளர்களை 2012–ஆம் ஆண்டு நியமனம் செய்யப்பட்டுள்ளது. தற்போது 40 மருந்து ஆய்வாளர்கள் பணியிடங்களை நியமனம் செய்ய தமிழ்நாடு அரசு தேர்வாணையம் நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும் 12 இளநிலை பகுப்பாய்வாளர்கள் தேர்வு செய்யப்பட்டு பணி ஆணை வழங்கப்படவுள்ளது. 9 பகுப்பாய்வாளர் பணியிடங்களை நியமனம் செய்ய தமிழ்நாடு அரசு தேர்வாணையம் நடவடிக்கை எடுத்துள்ளது. அரசு பகுப்பாய்வு கூடத்தில் புதிய அதி நவீன உபகரணங்கள் வாங்க சுமார் 14–கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதி நவீன உபகரணங்கள் கொள்முதல் செய்து, பகுப்பாய்வுகூடம் நவீனமயம் செய்யப்பட்டுள்ளது.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
15	30	87	சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் பழைய கட்டிடங்களை இடித்து விட்டு ரூ.37.50 கோடிக்கு புதிய கட்டிடம் கட்டப்பட வேண்டும் என்றும் உபகரணங்கள் மற்றும் ஈ.சி.ஜி வாங்குவதற்கு ரூ.20.00 கோடி வரை நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்றும் இந்திய மருத்துவக் கவுன்சில் வரையறையின்படி இல்லை என்றாலும் நோயாளிகளின் தேவையை கருத்திற்கொண்டு நிதித் துறையின் ஒப்புதலுடன் மாநில அரசின் நிதியைப் பெறுவதற்கு இதனை ஒரு சிறப்பு நேர்வாகக் கருதி துறை மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
மேற்கண்ட பரிந்துரையின் அடிப்படையில் சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு புதிய அறிவிப்பு நிதி நிலை அறிக்கை 2007–2008 மீதான கட்டிடங்கள் கட்டவும் நவீன கருவிகள் உள்ளடக்கிய உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்த பரிந்துரை, அறிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் புதிய கட்டிடம் கட்டிட 2008 – 2009 தரைத்தளம் மற்றும் ஆறு அடுக்கு தளங்கள் கட்ட அரசு ரூபாய்.41.20 கோடியை அரசு ஆணை எண்.173, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் (ஜெ1) துறை, நாள்.16.06.2009. ஒதுக்கீடு செய்து அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதன் பின்னர் அரசு அத்தொகையை திருத்தி ரூபாய் 45.54 கோடியாக ஒதுக்கி அரசு ஆணை எண்.15, சுகாதாரம் (ம) குடும்ப நலத் (ஜெ1) துறை, நாள்.24.01.2013ல் வழங்கப்பட்டு பல மாடி கட்டிடமாக கட்டப்பட்டு அதில் 30.12.2013 முதல் துறைகள் செயல்பட்டு வருகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
16	32	94	சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் இருதய அறுவை சிகிச்சை செய்வதற்காக மேலும் ஒரு மருத்துவர் குழு அமைக்கப்படுவதற்கும் கூடுதலாக படுக்கை வசதிகளை ஏற்பாடு செய்வதற்கும் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் செயலாளர் மூலம் உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இது குறித்த அறிக்கை ஒன்று குழுவிற்கு அளிக்கப்பட வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
2003 – 2005 ஆண்டு மதிப்பீட்டு குழு 28வது அறிக்கையில் வரிசை எண்.32 பத்தி 94–ல் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் பழைய கட்டடத்தில் இயங்கி வந்த இருதய சிகிச்சை பிரிவானது தற்போது பல மாடி அடுக்கு கட்டடத்தில் இரண்டு மருத்துவ குழு அடங்கிய மொத்தம் 30 படுக்கை வசதிகளுடன் 24X7 முழு கண்காணிப்புடன் செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட இருதய சிகிச்சைக்காக அமைக்கப்பட்ட மருத்துவக்குழு ஒரே நாளில் 7 நபர்களுக்கு நவீன முறையில் தொடையின் இரத்த நாளம் வழியாக அறுவை சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு நோயாளிகள் பயன்பெறும் வகையில் முதலமைச்சர் விரிவான காப்பீட்டு திட்டத்தின் கீழ் சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், தற்போது இத்துறையை விரிவுப்படுத்த அரசு உயர்	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

சிறப்பு சிகிச்சை கட்டடத்தை நாள்.03.12.2014 ரூ.75 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு அக்கட்டிடத்திற்கு தேவையான கூடுதல் படுக்கை வசதிகளுடன் செய்திட கூடுதலாக அரசு ரூ.9.92 கோடி அரசு ஆணை எண்.82, சுகாதாரம், நாள்.14.03.2018ல் வழங்கப்பட்டு அப்பணிகள் நடைப்பெற்று வருகிறது. மேலும் இந்த புதிய கட்டிடத்தில் இருதய ஆய்வகம் அடங்கிய முழு கட்டமைப்புடன் அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், இங்கு வரும் நோயாளிகள் அனைவருக்கும் தாமதமின்றி முதலமைச்சர் விரிவான காப்பீட்டு திட்டத்தின் கீழ் உயரிய சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறது என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
17	33	97	அரசு ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை முறையை ஏற்படுத்துவதற்கு துறை தீவிர நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் மத்திய நிதி உதவியைப் பெறுவதற்கும் நிதித்துறையிடம் கலந்தாலோசித்து மானில நிதியைப் பெறுவதற்கும் துறையின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது. தமிழ்நாட்டில் அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை முறையை ஏற்படுத்துவதற்கு நிதித்துறை கூடுதல் நிதி ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.	பழைய கட்டடத்தில் இயங்கிவந்த கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைக்கென தரை தளம் மற்றும் 3 தளங்கள் கொண்ட தனி கட்டடமாக கட்டப்பட்டு கல்லீரல் மற்றும் அறுவை சிகிச்சைக்கு தேவைப்படும் நிதிகளை அரசு வழங்கியதன் அடிப்படையில் அத்துறைக்கு தேவைப்படும் அனைத்து மருத்துவ உபகரணங்கள் அடங்கிய முழு கட்டமைப்புடன் தற்போது செயல்பட்டு வருகிறது. மேலும், இப்பிரிவில் உள்ள அறுவை அரங்கங்கள் நவீன முறையில் உலகத் தரம் வாய்ந்த எப்பாக்ஸி தரை, ஹெப்பா வடிகட்டி, அதிக காற்றழுத்த சூழல், அதிநவீன தீவிர சிகிச்சைப்பிரிவு கட்டில்கள் மற்றும் கண்காணிப்பு கருவிகள் போன்றவற்றை நிறுவிட அரசு ஆணை எண்.315, சுகாதாரம், 21.12.2013–ல் ரூ.3 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 11.01.2016 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும் இத்துறைக்கு அறுவை சிகிச்சைக்காக வரும் நோயாளிகள் அனைவரும் முதலமைச்சர் விரிவான காப்பீட்டு திட்டத்தின் கீழ் தரமான மிக உயரிய சிகிச்சை சிறந்த முறையில் தமிழ்நாட்டிற்கே முன்மாதிரியாக இந்நாள் வரை திகழ்ந்து வருகிறது. மேலும், அரசு மேற்கண்ட பரிந்துரையின் அடிப்படையில் இத்துறையின் மீது தனி கவனத்துடன் இத்துறைகேற்ப தேவையிருப்பின் உரிய	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

காலத்தில் அரசு இந்நிலையில் அரசு தற்போது அரசாணை (2D) எண்.103, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் (இ2) துறை, நாள்.05.07.2017ல் இத்துறைக்கு தேவைப்படும் மருந்துகள் மருத்துவம் சார்ந்த பயன்பாட்டு பொருட்கள் மற்றும் உபகரணங்கள் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் மூலம் பெற்றிட கூடுதலாக ரூ.4.15 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
18	34	100	சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்றும் இப்பிரிவிற்குத் தேவையான உபகரணங்களை வாங்குவதற்கும் முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

குழுவின் குறிப்புரை (6)	
சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் உள்ள குழந்தைகள் சிகிச்சைப்பிரிவிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும் என்றும், அத்துறைக்கு தேவையான உபகரணங்கள் வாங்குவதற்கு முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று 2003 – 2005 முதல் மதிப்பீட்டு குழு 28 வது அறிக்கையில் வரிசை எண் 34 பத்தி 100ல் குழுவின் பரிந்துரையின் பேரில் இம்மருத்துவமனையில் உள்ள குழந்தைகள் சிகிச்சைப் பிரிவிற்கு தேவையான அனைத்து உபகரணங்களும் தேசிய சுகாதார மைய (NHM) ஆலோசனையின் கீழ் அத்துறைக்கென தனி ஒரு மருத்துவ அலுவலரும் அத்துறைக்கு தேவையான உபகரணங்களை பெற்றிட அவர்களின் வழியாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. தற்போது குழந்தைகள் நலப்பிரிவில் கீழ்க்கண்ட உபகரணங்கள் முழு கட்டமைப்புடன் உள்ளன. என்பதையும் மேலும் அத்துறையினை வலுப்படுத்த தேவையான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
19	35	104	சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் மருந்துகளுக்காக ஒதுக்கப்படும் தொகையை அதிகரிப்பதற்கும் நோயாளிகளுக்கு தேவையான மருந்துகள் கிடைப்பதை உறுதி செய்வதற்கும் துறை நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் இது குறித்து முன்னறிவிப்பின்றி ஆய்வுகள் துறைச் செயலாளரால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.	தற்போது ஸ்டான்லி மருத்துவமனைக்கு மருத்துவக்கல்வி இயக்குநர் அவர்கள் ஆண்டுதோறும் தங்களுக்கு தேவைப்படும் நிதியினை உரிய தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் மூலம் மருந்துகள் பெற்றிட ரூ.12,97,91,651/- மற்றும் அவசர தேவைக்கு உள்ளூர் கொள்முதல் செய்திட ரூ.1,19,50,000/-2210-01-110-6600 தலைப்பின்கீழ் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு மேற்கண்ட நிதியைக் கொண்டு இங்கு வரும் அனைத்து நோயாளிகளுக்கும் மருந்து தட்டுப்பாடு இன்றி இந்நாள் வரை உரிய முறையில் மருந்துகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இத்தொகையை இம்மருத்துவமனையில் சிகிச்சைக்காக வரும் நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப அரசிடம் இருந்து மேற்கண்ட தலைப்பின் கீழ் திருத்திய திட்ட மதிப்பீட்டில் ஆண்டுதோறும் கூடுதலாக நிதி பெறப்பட்டு வருகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016-6, நாள் 29.10.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.
வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்		
(1)	(2)	(3)	(4)		
20	42	124	கடலூர் மாவட்டத்தில் விருத்தாசலம், சிதம்பரம், பரங்கிப்பேட்டை, காட்டுமன்னார்கோயில் ஆகிய அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்கள் குடியிருப்புகள் கட்டப்படுவதற்கு விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.		

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
கடலூர் மாவட்டத்தில் விருத்தாசலம், சிதம்பரம், பரங்கிப்பேட்டை, காட்டுமன்னார்கோயில் ஆகிய அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்கள் குடியிருப்புகள் கட்டுவதற்கு போதுமான இடவசதி இல்லை என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
21	53	156	எடப்பாடி, அரசு மருத்துவமனையில் ஆக்கிரமிப்பு செய்த நிலத்தை திரும்ப பெற்றுக்கொண்டது குறித்த அறிக்கை அளிக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
சேலம் மாவட்டம், எடப்பாடி, அரசு மருத்துவமனையில் ஆக்கிரமிப்பு செய்த நிலத்தை திரும்ப பெற்றுக் கொள்ளப்பட்டு அப்பகுதியில் வெளிநோயாளிகள் பிரிவு மற்றும் இரத்த சுத்திகரிப்பு பிரிவு ஆகிய கட்டிடங்கள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேலும் மருத்துவமனையின் நிலம் முழுவதும் சுற்றுச்சுவர் கட்டப்பட்டு மருத்துவமனையின் கட்டுப்பாட்டில் உள்ளது என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
22	57	167	சேலம் மாவட்டம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவமனைக்கு எச்.எஸ்.பி திட்டத்தின் கீழ் கூடுதலாக 300 படுக்கை வசதிகள் ஏற்படுத்துவதற்கு துறை நடவடிக்கையினை எடுக்க வேண்டும் என்றும் இது குறித்த அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அளிக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
சேலம் மாவட்டம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவமனையில் (சுகாதார திட்டம்) எச்.எஸ்.பி திட்டத்தின் கீழ் 300 படுக்கை வசதிகள் ஏற்படுத்துவதற்கு துறை ரீதியான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளவில்லை. இம்மருத்துவமனையில் மொத்தம் 1642 படுக்கை வசதி கொண்டது. சுகாதாரத் திட்டத்தின் கீழ் இம்மருத்துவமனை வளாகத்தில் (H.S.P) கூடுதலாக 300 படுக்கைகள் கொண்ட கட்டிட வசதி எதுவும் கட்டப்படவில்லை. இதில் அதிநவீன சிகிச்சை மருத்துவமனை (PMSSY) திட்டத்தின் கீழ் 442 படுக்கை வசதி அமைக்கப்பட்டுள்ளது. மேலும், RCH திட்டத்தின் கீழ் 600 படுக்கை வசதி செயல்பட்டு வருகிறது. இதர பிரிவுகளுக்கு 600 படுக்கை வசதிகள் உள்ளது. மேலும் இம்மருத்துவமனையில் வெளிநோயாளியாக தினமும் 4000 பேரும், உள்நோயாளியாக தினமும் 300 பேரும் பயன்பெற்று வருகிறார்கள். (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
23	58	170	சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவிற்கு புதிய கட்டிடம் விரைவில் கட்டப்பட வேண்டும் என்று இது குறித்து தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவிற்கு புதிய கட்டடம் ஏதும் இம்மருத்துவமனை வளாகத்தில் செயல்படவில்லை அதேசமயம், இம்மருத்துவமனை வளாகத்தில் உள்ள கட்டடத்தில் சித்த மருத்துவப் பிரிவு, புறநோயாளி பிரிவு செயல்பட்டு வருகிறது. சித்த மருத்துவ பிரிவில் பணிபுரியும் மருத்துவருக்கோ, இதர பணியாளருக்கோ இம்மருத்துவமனை நிர்வாகத்தின் மூலம் ஊதியம் மற்றும் இதர படிகள் ஏதும் பெற்று வழங்கப்படுவதில்லை. மேலும் சித்த மருத்துவப் பிரிவில் பணிபுரியும் மருத்துவர்களோ இதர பணியாளர்களோ இம்மருத்துவமனை நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் செயல்படவில்லை. இப்பிரிவு இந்திய மருத்துவத் துறையின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது. மேலும் சித்த மருத்துவப் பிரிவில் புறநோயாளிகளாக நாள் ஒன்றுக்கு தோராயமாக 150 பேர் பயன்பெற்று வருகிறார்கள். (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
24	61	180	ஸ்ரீவைகுண்டம் மருத்துவமனையில் காலியாகவுள்ள மருத்துவர் பணியிடங்களுக்கு மருத்துவர்களை நியமிப்பதற்கு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மூலம் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட 15 மருத்துவர்கள் பணியிடங்களில் 13 மருத்துவர்கள் பணியில் உள்ளனர். எஞ்சியுள்ள காலிப்பணியிடங்கள் எதிர்வரும் காலங்களில் பட்டயப்படிப்பு முடித்த மருத்துவர்கள் மூலமும் மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் மூலமும் நிரப்பப்படுவார்கள். (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
25	62	183	திருநெல்வேலி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள் தங்கும் பொருட்டு மருத்துவர்கள் குடியிருப்புகள் விரைவாக பழுது பார்க்கப்பட்டு சீரமைக்கப்பட வேண்டும் என்றும் இது குறித்து துறையின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
தூத்துக்குடி மாவட்டம், அரசு மருத்துவமனை திருவைகுண்டத்தில் மருத்துவர்கள் தங்கும் பொருட்டு புதிய / பழைய குடியிருப்புகள் ஏதும் இல்லை என்ற விபரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
26	64	188	திருநெல்வேலி மாவட்டம் சேரன்மகாதேவி அரசு மருத்துவமனைக்கு புதிய ஆம்புலன்ஸ் ஒன்றினை விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் இது குறித்த அறிக்கை ஒன்று குழுவிற்கு அனுப்பப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
இணை இயக்குநர் நலப்பணிகள் கட்டுப்பாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகளில் எவ்வித ஆம்புலன்ஸ் வசதியும் ஏற்படுத்த இயலாது என்பதால் EMRI மூலம் 108 ஆம்புலன்ஸ் வசதி ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
27	72	206	இராஜபாளையத்தில் அரசு மகப்பேறு மருத்துவமனை நகருக்குள் சிறப்பாக செயல்படுகிறது என்றாலும் இரண்டு மருத்துவமனைகளையும் ஒரு இடத்தில் செயல்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதை துறை மீண்டும் ஆராய்ந்து இது குறித்து அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அளிக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
	(5)	(6)
	விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் அரசு மருத்துவமனை மற்றும் மகப்பேறு மருத்துவமனை என இரண்டு பிரிவுகளாக செயல்பட்டு வருகிறது. இதில் மகப்பேறு மருத்துவமனை பழையபேருந்து நிலையம் அருகில் செயல்பட்டு வருகிறது. இன்னொரு மருத்துவமனை நகருக்கு வெளியில் செயல்பட்டு வருகிறது. மகப்பேறு மருத்துவமனை கர்ப்பிணி பெண்கள் சிகிச்சை பெறுவதற்கு வசதியாக பேருந்து நிலையம் அருகில் செயல்பட்டு வருவதால் இம்மருத்துவமனைக்கு வரும் கர்ப்பிணி பெண்களுக்கு எளிதாக உள்ளது. மேலும் இம்மருத்துவமனை இரத்த வங்கி, குழந்தைகள் நலப்பிரிவு என மகப்பேறு பிரிவுக்கான அனைத்து வசதிகளும் இம்மருத்துவமனையில் உள்ளது எனினும் வருங்காலத்தில் பொதுமக்களின் கருத்தை அறிந்து அவர்களின் தேவைக்கு ஏற்ப இரண்டு மருத்துவமனைகளும் ஒரே வளாகத்தில் செயல்பட தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
28	74	212	வருங்காலத்தில் மருத்துவமனைகளில் குளிர்சாதனக் கருவி பழுதுபட்டால் பொதுப்பணித் துறை மூலம் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் இப்பணியில் காலதாமதம் ஏற்படும் நேர்வுகளில் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் இது தொடர்பாக அறிவுரைகள் மருத்துவத்துறை அலுவலர்கள் சம்மந்தப்பட்ட அனைத்து அலுவலர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்றும் அது குறித்த விவரங்களை குழுவிற்குத் தெரிவிக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			ஆண்டுதோறும் அரசால் கட்டடங்கள் (பராமரிப்பு மற்றும் செப்பனிடுதல்) போன்றவற்றிற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட நிதி மருத்துவ நிலையங்களிலிருந்து பெறப்படும் Priority list படி Civil works மற்றும் Electrical works என பிரித்து வழங்கப்படுகிறது. மேலும் இந்நிதி தலைமைப் பொறியாளர், பொது பணித் துறையினர் மூலம் வழங்கப்படுகிறது. மேலும் மருத்துவமனைகளில் குளிர்சாதனக் கருவி பழுதுபட்டால் பொதுப்பணித் துறை மூலம் உடனடியாக நடவடிக்கை எடுக்கும் பொருட்டு இயந்திரங்கள் பராமரிப்புக்கு ஆண்டு பராமரிப்பு நிதி (Annual Maintenance Charge) ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
29	75	214	இராஜபாளையம் அரசு மருத்துவமனை வளாகத்தில் தாய்சேலை அமைக்கப்படுவதற்கு உடனடியாக துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

		துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
		விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் அரசு மருத்துவமனை வளாகத்தில் சிமெண்ட் கற்கள் மூலம் சிமெண்ட்சாலை அமைக்கப்பட்டுள்ளது.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
30	80	226	புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர் அரசு மருத்துவமனைக்கு கூடுதலாக மருத்துவர்கள் நியமிக்கப்படுவதற்கும் ஆண் மருத்துவர்கள் மற்றும் கதிரியலர் (Radiologist) ஆகியோரை நியமிப்பதற்கும் துறை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			கீரனூர் அரசு மருத்துவமனைக்கு மொத்தம் ஆறு மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. அவை முறையே CCS-1, AS-4, AS-1(Dental) ஆகும். இந்த ஆறு பணியிடங்களிலும் ஆறு மருத்துவர்கள் பணிபுரிகின்றனர். மருத்துவர் காலிப்பணியிடம் ஏதும் இல்லை. Radiologist பணியிடம் நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
31	81	229	புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர் அரசு மருத்துவமனைக்கு குடிநீர் வழங்குவதற்கான மேல்நிலைத் தொட்டியினை ரூ.5.80 இலட்சம் செலவில் கட்டுவதற்கு துறை மூலம் விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

		துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
		புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர் அரசு மருத்துவமனையில் ஒரு ஆழ்குழாய் கிணறு வசதி உள்ளது. இந்த போர்வெல் இருந்து மருத்துவமனையில் உள்ள ஆறு கட்டங்களிலும் முறையே 5000லி, 1000லி, 1000லி, 500லி, 500லி, 500லி கொள்ளளவு கொண்ட சின்டக்ஸ் டாங்கில் தண்ணீர் சேமிக்கப்பட்டு மருத்துவமனையில் பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் கீரனூர் பேரூராட்சியிலிருந்தும் குடிநீர் பெறப்பட்டு வருகிறது. அதனையும் பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
32	85	245	புதுக்கோட்டை அரசு பொது மருத்துவமனையில் குழு கோரிய 17 பணிகளும் விரைவில் முடிக்கப்பட வேண்டும் என்றும் இது குறித்து குழுவிற்கு அறிக்கை ஒன்று அனுப்பப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			அரசாணை எண் 342, நாள் 19.11.2015–இன்படி புதுக்கோட்டை அரசு தலைமை மருத்துவமனையானது அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு முள்ளூர் என்ற இடத்தில் புதிதாக கட்டடங்கள் கட்டப்பட்டு மருத்துவக்கல்வி இயக்ககத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம் (4)
(1)	(2)	(3)	
33	87	249	புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் நோயாளிகளின் அதிக வருகையை கருத்திற்கொண்டும் பழைய கட்டிடங்களை இடிக்கக் கூடாது என்பதால் இட வசதியைக் கருத்தில் கொண்டும் மருத்துவமனை வளாகத்தினுள் காலியாக உள்ள இடத்தில் புதிதாக பெரிய கட்டிடம் ஒன்று விரைவில் கட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் பழைய கட்டிடங்கள் சீரமைப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் முன்னுரிமை அடிப்படையில் இப்பணிகளை முடிக்க துறையின் செயலாளர் தனி கவனம் செலுத்த வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
	அரசாணை எண். 342, நாள் 19.11.2015ன்படி புதுக்கோட்டை அரசு தலைமை மருத்துவமனையானது அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு முள்ளூர் என்ற இடத்தில் புதிதாக கட்டடங்கள் கட்டப்பட்டு மருத்துவக்கல்வி இயக்ககத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்		
			(4)		
(1)	(2)	(3)			
34	89	257	புதுக்கோட்டை இராணியார் மகப்பேறு அரசு மருத்துவமனையில் மருத்துவர் காலிப் பணியிடங்களை விரைவில் நிரப்புவதற்கு முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் ஒப்பந்த அடிப்படையிலான மருத்துவர்கள் உடனடியாக நியமிக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.		
			துறையின் பதில்	குழுவின் குறிப்புரை	
			(5)	(6)	
			அரசாணை எண். 342, நாள் 19.11.2015–இன்படி புதுக்கோட்டை அரசு தலைமை மருத்துவமனையானது அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு முள்ளூர் என்ற இடத்தில் புதிதாக கட்டடங்கள் கட்டப்பட்டு மருத்துவக்கல்வி இயக்ககத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.	

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்		
			(4)		
(1)	(2)	(3)			
35	91	261	திருவாரூர் மாவட்டத்தில் உள்ள 54 மருத்துவர் காலி பணியிடங்களை நிரப்புவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் இது குறித்து அறிக்கை ஒன்று குழுவிற்கு அனுப்பப்பட வேண்டும் என்றும் குழு மேலும் பரிந்துரை செய்கிறது.		
			துறையின் பதில்	குழுவின் குறிப்புரை	
			(5)	(6)	
			திருவாரூர் மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளில் ஒப்பளிக்கப்பட்ட மொத்த பணியிடமான 100 மருத்துவர்கள் பணியிடத்தில் 88 மருத்துவர்கள் தற்போது பணியில் உள்ளனர். எஞ்சியுள்ள காலிப் பணியிடங்கள் எதிர்வரும் காலங்களில் பட்டயபடிப்பு முடித்த மருத்துவர்கள் மூலமும் மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் மூலமும் நிரப்பப்படும். (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.	

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
36	95	274	திருவாரூர் மாவட்டம் குடவாசல் அரசு வட்டம் மருத்துவமனைக்கு முதுநிலை குடிமை மருத்துவர், பெண் மருத்துவர் மற்றும் காலிபணியிடங்களுக்கான மருத்துவர்கள் உடனடியாக நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இம்மருத்துவமனைக்கு தேவையான உபகரணங்கள் கட்டிடவசதிகள் உலகளவில் வங்கியின் இரண்டாம் கட்ட மருத்துவமனை மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
குடவாசல் அரசு மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட 7 மருத்துவர் பணியிடங்களில் பெண் மகப்பேறு மருத்துவர் தற்போது பணிபுரிந்து வருகிறார். மேலும் எஞ்சியுள்ள 6 மருத்துவர் பணியிடங்களில் 4 மருத்துவர்கள் பணியில் உள்ளனர். எஞ்சியுள்ள காலிப் பணியிடங்கள் எதிர்வரும் காலங்களில் பட்டயபடிப்பு முடித்த மருத்துவர்கள் மூலமும் மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் மூலமும் நிரப்பப்படுவார்கள்.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016-6, நாள் 29.10.2019)

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
37	96	278	நன்னிலம் போன்ற மிகவும் பின்தங்கிய பகுதியிலுள்ள அரசு மருத்துவமனைக்கு சிறப்பு அனுமதி மூலம் மருத்துவர்கள் மருத்துவ உபகரணங்கள் ஆகியவை வழங்குவதற்கு துறை மூலம் சிறப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
நன்னிலம் அரசு மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட 13 மருத்துவர்கள் பணியிடங்களில் 12 மருத்துவர்கள் பணியில் உள்ளனர். எஞ்சியுள்ள 1 காலிப் பணியிடங்கள் எதிர்வரும் காலங்களில் பட்டயபடிப்பு முடித்த மருத்துவர்கள் மூலமும் மருத்துவபணியாளர் தேர்வாணையம் மூலமும் நிரப்பப்படுவார்கள் என்பதை அரசுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், புதிய மருத்துவ உபகரணங்களும் வழங்கப்பட்டு நோயாளிகள் பயன்பாட்டில் உள்ளது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
38	100	290	திருவாரூர் மாவட்டம் அரசவனங்காடு மருத்துவமனைக்கு பெண் மருத்துவர் கண்டிப்பாக நியமிக்கப்பட வேண்டும் என்றும் இம்மருத்துவமனையை தரம் உயர்த்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்

(5)

திருவாரூர் மாவட்டம் கொரடச்சேரி ஊராட்சி ஒன்றியம் அரசவனங்காடு கிராமத்தில் மருத்துவமனை எதுவும் செயல்படவில்லை. பெரும்பண்ணையூர் பிரதான/ மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. திருவாரூர் மாவட்டம் கொடச்சேரி ஊராட்சி ஒன்றியத்தில் பெரும்பண்ணையூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் அரசாணை எண்.142, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள் 30.04.2007–ன்படி ஏற்கெனவே தரம் உயர்த்தப்பட்டு 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. பெரும்பண்ணையூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவ அலுவலர் ஒப்பளிப்பு–5, இருப்பு–4, காலிப்பணியிடம்–1 ஆகும். இங்கு பணிபுரிந்து வரும் மருத்துவ அலுவலரில் 2 மருத்துவ அலுவலர் ஆண்கள் 2 மருத்துவ அலுவலர் பெண்கள். அருகில் உள்ள 2 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மருத்துவ அலுவலர் பணியிடம் காலியாக உள்ளதால் 2 (1 ஆண் மற்றும் 1 பெண்) மருத்துவ அலுவலர் மாற்றுப் பணியில் பணிபுரிந்து வருகின்றனர். மேலும் அனைத்து வெள்ளிக் கிழமைகளிலும் மரு.மகாலட்சுமி என்ற பெண் மருத்துவ அலுவலர் மகப்பேறு பெண்களுக்கு ஸ்கேன் பார்ப்பதற்கு வந்து செல்கின்றார், பள்ளி நலக்குழுவில் 2 மருத்துவ அலுவலர் (1 ஆண் மற்றும் 1 பெண்) மற்றும் நடமாடும் மருத்துவக் குழு (1 ஆண்) ஆகியோர் பணிபுரிந்து வருகின்றனர்.

குழுவின் குறிப்புரை

(6)

துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
39	110	317	வால்பாறை அரசு மருத்துவமனைக்கு விரைவில் மருத்துவரை நியமிப்பதற்கு துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் இவ்வாறு நியமிக்கப்படும் மருத்துவர் நீண்ட காலத்திற்கு மாறுதல் செய்யப்படக் கூடாது என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்

(5)

வால்பாறை அரசு மருத்துவமனைக்கு அரசால் ஒப்பளிக்கப்பட்ட 12 மருத்துவப் பணியிடங்களில் தற்போது 11 மருத்துவர்கள் பணியில் உள்ளனர். எஞ்சியுள்ள 1 மருத்துவர் காலிப்பணியிடம் எதிர்வரும் கலந்தாய்வில் நிரப்பப்படும்.

குழுவின் குறிப்புரை

(6)

துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
40	111	318	வால்பாறை சட்டமன்ற தொகுதி அங்களகுறிச்சி ஊராட்சி துணை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு முன்னுரிமை அடிப்படையில் மருத்துவர்கள் நியமிக்கப்படவேண்டும் என்றும் மகப்பேறு வார்டு கட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
வால்பாறை சட்டமன்ற தொகுதி அங்களகுறிச்சி ஊராட்சி துணை ஆரம்ப சுகாதார நிலையம் ஆனைமலை வட்டாரத்தில் உள்ள ஆழியார்நகர் ஆரம்ப சுகாதார நிலையத்தின் கீழ் உள்ளது. அரசு விதிகளின் படி துணை சுகாதார நிலையத்திற்கு மருத்துவ அலுவலர் ஒப்பளிப்பு இல்லை. அங்களகுறிச்சி துணை சுகாதார நிலையம் பஞ்சாயத்து யூனியன் அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. அங்களகுறிச்சி துணை சுகாதார நிலையத்தில் பிரசவ அறை தனியாக அமைக்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு துணை சுகாதார நிலையத்திற்கும் ஒரு கிராம சுகாதார செவிலியர் பணியிடம் மட்டுமே ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மருத்துவர் பணியிடம் துணை சுகாதார நிலையத்தில் ஒப்புதல் அளிக்கப்படவில்லை. ஆரம்ப சுகாதார நிலையத்தில் தான் மருத்துவர் பணியிடம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. எனவே கோயம்புத்தூர் சுகாதாரப் பகுதி மாவட்டம், வால்பாறை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, ஆழியார்நகர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட அங்களகுறிச்சி துணை சுகாதார செவிலியர் (VHN) பணியிடம் மட்டுமே ஒப்புதல் செய்யப்பட்டுள்ளது. மேலும் அங்களகுறிச்சி கிராம மக்களுக்கு தாய்சேய் நலப் பணிகள், தடுப்பூசி பணிகள், குடும்ப நலம் மற்றும் சிறு நோய்களுக்கு சிகிச்சை அளித்தல் ஆகிய சுகாதார சேவைகள் கிராம சுகாதார செவிலியர் மூலமாக கிடைக்கப்பெற்று வருகிறது. எனவே அங்களகுறிச்சி துணை சுகாதார நிலையத்தில் மருத்துவர் பணியிடம் ஒப்புதல் செய்யப்படவில்லை.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
41	115	328	வால்பாறை அரசு மருத்துவமனையில் நீர் கசிவு மற்றும் பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொண்டது குறித்த அறிக்கை ஒன்று குழுவிற்கு விரைவில் அளிக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
வால்பாறை அரசு மருத்துவமனையில் ஏற்பட்டுள்ள நீர்கசிவு சரிசெய்ய கட்டிடம் மற்றும் பராமரிப்பு நிதியின்கீழ் இவ்வியக்ககத்தின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மேற்கண்ட பணிகள் நிறைவேற்றப்படும்.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
42	118	336	துறை வாங்குவதற்கு உத்தேசித்துள்ள 18 அமரர் ஊர்திகளுள் ஒன்றினையோ புதிதாக வாங்கப்பட்டோ கோயம்புத்தூர் அரசு பொது மருத்துவமனைக்கு விரைவில் அமரர் ஊர்தி ஒன்றினை வழங்குவதற்கு துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இறந்தவர்களின் உடலை எடுத்துச் செல்ல ஏற்கெனவே Free Hearse Service -ன் கீழ் (FHS) 155377 என்ற தொலைபேசி எண் கொண்ட இலவச அமரர் ஊர்தி சேவை நடைமுறையில் உள்ளது.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
43	120	342	கோயம்புத்தூர் அரசு மருத்துவமனையில் அதிக அளவு நோயாளிகள் சிகிச்சை பெறுவதால் மருத்துவமனையை சுத்தமாக பராமரிப்பதற்கு மருத்துவக் கல்லூரி முதல்வருக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் அரசு மருத்துவமனைகளையும் சுகாதாரமாகப் பராமரிப்பதற்கு அனைத்து மருத்துவமனை அதிகாரிகளுக்கும் உரிய அறிவுரைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் இதன் நகல் குழுவிற்கு அனுப்பப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.	இம்மருத்துவமனையினை சுத்தமாகப் பராமரிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மருத்துவமனைக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள சுகாதாரப் பணியாளர்களுடன் ஒப்பந்த முறையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். 316 சுகாதார பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இவர்களது பணியினை மேற்பார்வையிடவும் பணியாளர்களின் பணியினை அவ்வப்போது கண்காணித்து வரவும் 25 மேற்பார்வையாளர்களும் தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலும் மருத்துவமனையின் பராமரிப்பு பணியினை உதவி இருப்பிட மருத்துவ அலுவலர் (Outsource) மற்றும் மருத்துவமனையின் முதல்வர் அவர்களுடன் அவ்வப்பொழுது பார்வையிடப்பட்டு வருகிறது. சுகாதாரக் குறைபாடுகள் பற்றிய விபரம் மருத்துவமனையின் முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரும் நிலையில் முதல்வரே நேரடியாக பார்வையிட்டு நடவடிக்கை மேற்கொண்டு வருவதுடன் சுகாதார சீர்கேட்டிற்கு காரணமான பணியாளர்கள் மீது உரிய நடவடிக்கையும் அவ்வப்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் காரணமாக சுகாதார பணியாளர்கள் மிகுந்த பொறுப்பு உணர்வுடன் பணியாற்றி வருகிறார்கள் என்பது இங்கு குறிப்பிடப்படுகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.
வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்		
(1)	(2)	(3)	(4)		
44	122	346	கோயம்புத்தூர் மாவட்டம் வால்பாறை, ரொட்டிக்கடை ஆரம்ப சுகாதார நிலையமும், வால்பாறை பெத்தநாயக்கனூர் ஆரம்ப சுகாதார நிலையமும் தரம் உயர்த்தப்படுவதற்கும் கூடுதல் முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.		

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தில் பெரியபோது பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் அரசாணை எண்.52, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள்.21.02.2014–ன்படி தரம் உயர்த்தப்பட்டுள்ளதால் இதே ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பெத்தநாயக்கனூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை. பெத்தநாயக்கனூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலைய உட்கட்டமைப்பு வசதியை மேம்படுத்த 2011 – 2012 ஆம் ஆண்டு தேசிய ஊரக நல குழும நிதி திட்டத்தின் கீழ் செவிலியர் குடியிருப்பு ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது. சமவெளிப்பகுதிகளில் 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்பகுதிகளில் 20,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் (Norms) ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகின்றது. ரொட்டிக்கடை கிராம மக்கள் தொகை 3,033 ஆகும். இக்கிராமத்தில் துணை சுகாதார நிலையம் உள்ளது. வால்பாறை ஆரம்ப சுகாதார நிலையத்தை சார்ந்தது. ரொட்டிக்கடை கிராமம் ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இந்த ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகை 2,07,620. இந்த ஊராட்சி ஒன்றியத்தில் 9 ஆரம்ப சுகாதார நிலையங்கள் முறையே 1.ஆனைமலை, 2.பெத்தநாயக்கனூர், 3.பெரியபோது, 4.சேத்துமடை, 5.ஆழியார் நகர் 6.வி.காளியாபுரம், 7.டாப்சிலிப், 8.சோலையார்நகர், 9.முடீஸ்நகர் ஆகியன செயல்பட்டு வருகின்றன. மேலும் வால்பாறை நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருகின்றது. மேலும் ரொட்டிக்கடை கிராமத்தில் இருந்து 6 கிலோமீட்டர் தொலைவில் வால்பாறை நகர்புற ஆரம்ப சுகாதார நிலையமும் மற்றும் வால்பாறை மருத்துவமனையும் செயல்பட்டு வருகின்றன. எனவே ரொட்டிக்கடை துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை. 2013 – 2014 ஆம் நிதியாண்டில் ரொட்டிக்கடை துணை சுகாதார நிலையத்திற்கு சொந்த கட்டடம் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. ரொட்டிக்கடை துணை சுகாதார நிலையத்தை அனைவருக்கும் நல்வாழ்வு மையம் ஆக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
45	124	351	கோட்டூர் அரசு மருத்துவமனைக்கு தேவையான அனைத்து உபகரணங்களும் தளவாடங்களும் விரைவில் மருத்துவமனைக்கு வழங்கப்படவேண்டும் என்னும் இது குறித்த அறிக்கை ஒன்று குழுவிற்கு அளிக்கப்படவேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
கோட்டூர் அரசு மருத்துவமனைக்கு தேவையான உபகரணங்கள் தளவாடங்கள் வழங்கப்பட்டு உள்ளது அனைத்து மருத்துவ வசதிகளுடன் தாலுக்கா அல்லாத மருத்துவமனையாக செயல்பட்டு வருகின்றது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
46	126	356	உதகமண்டலம் மாவட்ட தலைமை மருத்துவமனையின் காலி மருத்துவர்கள் பணியிடங்களை நிரப்புவதற்கு முன்னுரிமை அடிப்படையில் துறை மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
உதகமண்டலம் அரசு தலைமை மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட மொத்த மருத்துவர் பணியிடங்கள் 61 இல் 52 பணியிடங்கள் முன்னுரிமை அடிப்படையிலேயே நிரப்பப்பட்டுள்ளன. தற்போது 9 மருத்துவர் பணியிடங்கள் மட்டுமே காலியாக உள்ளது இப்பணியிடங்களையும் நிரப்பிட இயக்ககம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
47	127	359	உதகமண்டலம் செவிலியர் பயிற்சி பள்ளிக்குத் தேவையான கட்டிட வசதி மற்றும் அடிப்படை வசதிகள் ஆகியவற்றை மேற்கொள்வதற்கு துறை விரைவாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
உதகமண்டலம் அரசு செவிலியர் பயிற்சிப் பள்ளியில் பயிலும் மாணவிகளுக்கான விடுதி வசதிகள் 2010–2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. மேலும் பயிற்சி பள்ளிக்குத் தேவையான கூடுதல் கட்டிட வசதி மற்றும் அடிப்படை வசதிகள் மேம்படுத்திட தேசிய ஊரக குழும திட்டத்தின் கீழ் ரூ.500.00 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டு பொதுப்பணித் துறை மூலம் கட்டிட பணிகள் தற்போது மேற்கோள்ளப்பட்டு வருகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
48	130	364	கருங்கல், அரசு மருத்துவமனையில் மருத்துவர்களை நியமிக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் இம்மருத்துவமனையை 24 மணிநேரமும் செயல்படுவதற்கு தகுதியான மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் நியமனம், உபகரணங்கள்,ஆகியவை அளிக்கப்பட வேண்டும் என்றும் இது குறித்து துறை மூலம் கூடுதலாக நிதி ஒதுக்கப்படுவதற்கு சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
கன்னியாகுமரி மாவட்டம், கருங்கல், அரசு மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட பணியிடத்தில் பணியுரிந்துவரும் 4 மருத்துவர்களும் 24 மணிநேரமும் சுழற்சி முறையில் பணிபுரிந்து வருகிறார்கள். 18 உள்நோயாளிகள் படுக்கை வசதிகள் கொண்ட மேற்படி மருத்துவமனைக்கு கூடுதலாக பணியாளர் நியமனம் மற்றும் உபகரணங்கள் தேவைப்படின் பணியிடத்தை தோற்றிவிப்பதற்கும் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்வதற்கு துறை மூலம் முயற்சிகள் எடுக்கப்படும். (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

இணைப்பு – 3

மேலும் தொடர விரும்பும் பரிந்துரைகள்

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
1	6	22	அரசு மருத்துவமனைகளில் காலியாகவுள்ள மயக்க மருந்து மருத்துவர்கள் பணியிடங்கள் மூன்று மாதங்களுக்கு நிரப்பப்படுவதற்கு துறை மூலம் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.	காலியாக இருந்த மயக்க மருந்து மருத்துவர் பணியிடங்கள் உரிய தகுதியுடைய மருத்துவர்கள் மூலம் நிரப்பப்பட்டு வருகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	குழுவின் பரிந்துரையானது மூன்று மாதங்களில் காலியாக உள்ள மயக்க மருந்து மருத்துவர்களை நியமிக்கப்படவேண்டும் என்பதே ஆகும். எனவே, குழு பரிந்துரை செய்த பிறகு இதுவரை எத்தனை மயக்க மருந்து மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்ற விவரத்தை அறிய குழு விழைகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
2	15	45	எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வாங்குவதற்கு ரூ.5.00 கோடி வரை செலவாகும் என்றாலும் மருத்துவமனைக்கு வருகின்ற நோயாளிகளின் அவசியத்தைக் கருதி இவ்வாண்டிலேயே முதற்கட்டமாக பாளையங்கோட்டை அரசு மருத்துவமனையிலும் கோயம்புத்தூர் அரசு மருத்துவமனையிலும் இரண்டாவது கட்டமாக வரும் நிதியாண்டில் சேலம், திருச்சி போன்ற மாநகராட்சி மருத்துவமனைகளிலும் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் நிறுவப்படுவதற்கு துறை பயனுள்ள நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்றும் இந்திய மருத்துவ கவுன்சிலின் வரையறைக்கு உட்படவில்லை என்பது போன்ற காரணங்கள் இவ்விஷயத்தில் எழக்கூடாது என்றும் துறைச் செயலாளர் நிதித் துறையுடன் கலந்தாலோசித்து இவற்றிற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் முதல் எம்.ஆர்.ஐ கருவி 04.03.2008 அன்று நிறுவப்பட்டது. அதன் பின் 10 ஆண்டுகளுக்குப் பிறகு அதிநவீன எம்.ஆர்.ஐ கருவி 01.09.2018 அன்று பழைய கருவிக்கு பதிலாக (Buy-back) புதிதாக நிறுவப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதன் காரணமாக கோவை மாவட்ட மக்களுக்கு மட்டுமின்றி அருகில் உள்ள 6 மாவட்டங்களிலிருந்து வரும் நோயாளிகளுக்கும் அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகாவிலிருந்து வரும் நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இம்மருத்துவமனையில் எம்.ஆர்.ஐ ஸ்கேன் மூலம் பயன்பெற்ற நோயாளிகளின் எண்ணிக்கை விவரம் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.	குழு பரிந்துரை செய்த மற்ற இடங்களான பாளையங்கோட்டை அரசு மருத்துவமனையிலும் சேலம், திருச்சி போன்ற மாநகராட்சி மருத்துவமனைகளிலும் மேற்காணும் கருவிகள் நிறுவப்பட்ட விவரத்தினை அளிக்க குழு விழைகிறது.

வ. எண்	ஆண்டு	பயன் பெற்ற நோயாளிகளின் எண்ணிக்கை
1	2016	4635
2	2017	4660
3	2018	5423
4	மார்ச் 2019 வரை	1447

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
3	17	52	அனைத்து அரசு தலைமை மருத்துவமனைகளிலும், வட்டம், வட்டம் சாரா மருத்துவமனைகளிலும் நீரிழிவு சிகிச்சைக்கென தனிப் பிரிவுகள் திட்டமிடப்பட்டு படிப்படியாக ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் இது குறித்து கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			அனைத்து அரசு தலைமை மருத்துவமனைகளிலும், வட்டம், வட்டம் சாரா மருத்துவமனைகளிலும் தொற்றா நோய் பிரிவு செயல்பட்டு வருகிறது. இப்பிரிவில் நீரழிவு சிகிச்சைக்கு வரும் நோயாளிகளுக்கு சிகிச்சைகள் மற்றும் மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	நீரிழிவு நோய்க்கான தனிப்பிரிவு தொடங்கப்பட வேண்டும் என்பது குழுவின் பரிந்துரை. படிப்படியாக ஒவ்வொரு மருத்துவமனையாகத் தொடங்க துறை கருதிப் பார்த்ததா என்பதை குழு அறிய விரும்புகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
4	18	53	ஆண்டுதோறும் நீரிழிவு நோயாளிகள் அதிகரித்து வருவதால் இந்நோயை தடுப்பதற்கு மாநில அளவில் ஆராய்ச்சிகள் நடத்தப்பட வேண்டும் என்றும் மருத்துவ நிபுணர்கள் மற்றும் அனைத்து உபகரணங்கள் மற்றும் அடிப்படை வசதிகளுடன் கூடிய நவீன ஆராய்ச்சிக் கூடம் ஒன்று அமைக்கப்படுவதற்கு துறை மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
	அனைத்து மருத்துவமனைகளில் நீரிழிவு நோயாளிகளுக்கான சிகிச்சை பிரிவு தனியாக சிறப்பாக இயங்கி வருகிறது. மேலும் அந்தந்த மருத்துவமனைகளில் உள் மற்றும் வெளி நோயாளிக்கான மருத்துவ நிபுணர்கள், அனைத்து உபகரணங்கள் மற்றும் அடிப்படை வசதிகள் உள்ளது. எனவே மாநில அளவில் ஆராய்ச்சிகள் நடத்தப்பட மருத்துவ நிபுணர்கள் மற்றும் அனைத்து உபகரணங்கள் மற்றும் அடிப்படை வசதிகளுடன் கூடிய நவீன ஆராய்ச்சிக்கூடம் ஒன்று அமைக்கப்படுவதற்கான தேவை எழாது எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	குழுவின் பரிந்துரை துறையால் கருதிப் பார்க்கப்பட்டதா என்பதை அறிய குழு விரும்புகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
5	19	56	இந்தியாவிலேயே சென்னை மாநகரத்தை அனைத்து மருத்துவ வசதிகளைக் கொண்ட நகரமாக உருவாக்குவதற்கு தனியார் மருத்துவமனைகள் நிறுவனத்தினருடன் துறையின் செயலாளர் அளவில் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும் என்றும் இதன் மூலம் அதி நவீன தொழில் நுட்ப மருத்துவர் சாதனங்களை இறக்குமதி செய்வதற்கு வழிவகை செய்யப்பட வேண்டும் என்றும் துறை கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ள சட்ட திருத்தத்தில் இத்தகைய நிறுவனங்களின் மருத்துவமனைகளுக்கு சிறப்புச் சலுகைகள் வழங்குவதன் மூலம் பொதுமக்கள் பயனடைவது உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
தனியார் மருத்துவமனைகளில் அதிநவீன தொழில்நுட்ப மருத்துவ சாதனங்களை இறக்குமதி செய்ய நேரிடும்போது அதற்கேற்ப அரசிடம் கலந்தாலோசித்து தேவையான சட்டத்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	குழுவின் பரிந்துரைக்கு துறையால் முழுமையான தகவல் தெரிவிக்கப்படவில்லை என்றே குழு கருதுகிறது. குழுவின் பரிந்துரைக்கு துறைச் செயலாளர் நிலையில் நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டங்கள் மற்றும் குழு பரிந்துரை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து துறையால் அறிக்கையாக தெரிவிக்கப்படவேண்டும் என்று குழு விரும்புகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
6	20	60	ஊசி மூலம் போதை மருந்தை செலுத்திக் கொள்பவர்களில் எச்.ஐ.வி நிலவரத்தை அறியும் குருதி ஆய்வுகளில் இத்தகைய தவறுகள் ஏற்படக்கூடாது என்றும் குறைந்த எண்ணிக்கையிலான நபர்களின் குருதி ஆய்வின் அடிப்படையில் எச்.ஐ.வி நிலவரம் நிர்ணயிக்கக்கூடாது என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
பொது மக்கள் மற்றும் ஆபத்தான நடவடிக்கை / நடத்தை உள்ளவர்களிடம் எச்.ஐ.வி/எய்ட்ஸ் தாக்கம் எந்த அளவிற்கு உள்ளது என்பதை அறிந்து கொள்வதற்கு தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு அமைப்பு (NACO) இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை குருதி ஆய்வினை நடத்துகிறது. இவ்வாய்வு முடிவுகள் அனைத்தும் தேசிய அளவிலான எச்.ஐ.வி/எய்ட்ஸ் தடுப்பு திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும். மாநில அளவிலான குருதி ஆய்வுகள் நம்பிக்கை மையங்களின் மூலம் நடத்தப்படும். அதனடிப்படையில் எச்.ஐ.வி/எய்ட்ஸ் தடுப்பு திட்டங்களுக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு செயல்படுத்தப்படும். (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	ஏற்கெனவே குருதி ஆய்வு ஆண்டுக்கு ஒருமுறை நடத்தப்படுவதாகவும், 2003–ஆம் ஆண்டில் குருதி ஆய்வின்போது 250 பேர் பங்குகொள்ளாததால், குருதி ஆய்வு செய்தவர்களே மீண்டும் ஆய்வு செய்யப்பட்டதாக துறை தெரிவித்தது. அதன் காரணமாக எச்.ஐ.வி பாதிப்பு சதவிகிதம் குறைந்துள்ளதை குழு ஏற்றுக்கொள்ளவில்லை. தற்போதைய குருதி ஆய்வில் இதுபோன்ற பழக்கமுடைய எத்தனை நபர்களிடம் ஆய்வு செய்யப்பட்டது என்பதை குழு அறிய விழைகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
7	21	61	வரும் ஆண்டுகளில் எச்.ஐ.வி, நிலவரத்தை உண்மையாக அறியும் வண்ணம் ஆய்வுகள் நடத்தப்படுவதற்கு துறை சரியானதொரு வழிமுறையை பின்பற்ற வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
வருடந்தோறும் மாவட்ட வாரியாக எத்தனை நபர்களுக்கு எச்.ஐ.வி தொற்று ஏற்படுகின்றது என்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவற்றுள் முக்கிய மாவட்டங்களில் எச்.ஐ.வி தொற்று கணிசமாக குறைக்கப்பட்டுள்ளது. தேசிய அளவில், எச்.ஐ.வி தொற்று ஒப்பிடும் போது தமிழகத்தில் தொற்று விகிதம் மிக குறைவாக உள்ளது. இதை போல் கூட்டு மருந்து சிகிச்சை தேவைப்படும் நபர்களுக்கு சிகிச்சை இலவசமாக வழங்கப்படுகிறது மற்றும் கூடுதல் சிகிச்சை மையங்களும் அமைக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்படுகிறது. எச்.ஐ.வி தொற்றுக்குள்ளான கர்ப்பிணி பெண்களில் சதவீதத்தை அடிப்படையாக கொண்டு, அத்தொற்றுக்குள்ளான கர்ப்பிணி பெண்களில் பிரசவம் நடக்கின்ற அரசு மருத்துவமனைகளுக்கு நோய் தடுப்பு பெட்டகங்கள் வழங்கப்பட்டு வருகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	ஆய்வு எவ்வாறு நடத்தப்படுகிறது, சதவிகிதம் குறைந்ததற்கான புள்ளி விவரங்களை அறிக்கையாக அளிக்க குழு கேட்டுக்கொள்கிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
8	23	67	உலகத்தரம் வாய்ந்த இந்திய முறை மருத்துவமனை ஒன்றை ஏற்படுத்துவது குறித்த கருத்துரு இரண்டாண்டுகளுக்கு மேலாக நிலுவையாக இருப்பது திட்டத்தின் மதிப்பீட்டினை அதிகரிக்கும் என்றும், எனவே, அரசின் நிதிச்சுமையை குறைக்கும் வகையில் இத்திட்டம் குறித்து மிக விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் துறையின் மூலம் இத்திட்டத்தை விரைவில் செயல்படுத்துவதற்கு தனி கவனம் செலுத்தப்பட்டு தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
இம்மருத்துவமனையின் தரத்தினை மேம்படுத்த கடந்த 2013–2014 ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் விதி 110 கீழ் ரூ 10 கோடி நிதி ஒதுக்கி அறிவிப்பு செய்யப்பட்டு, மேம்பாட்டுப் பணிகள் முடிக்கப்பட்டு மருத்துவமனையின் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள கட்டடத்தில் மூன்றாம் தளம் அமைக்க ரூ.2.09 கோடி நிதி ஒதுக்கீடு கோரி கருத்துரு அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தேசிய ஆயுஷ் திட்டத்தின்கீழ் இம்மருத்துவமனை மற்றும் அதனுடன் இணைந்த மருந்துசெய் நிலையத்தின் தரத்தினை உயர்ந்த ரூ.1.60 கோடி மத்திய மாநில அரசின் பங்களிப்பு பெறப்பட்டு தரம் உயர்த்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.	இந்திய முறை மருத்துவ அடிப்படையில் உலகத் தரம் வாய்ந்த மருத்துவமனை சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகத்தில் அமைக்க முடிவெடுக்கப்பட்டு, மருத்துவமனையை வடிவமைக்க நடவடிக்கை

தரம் மேம்படுத்தப்படுதல் என்பது ஓர் தொடர் நடவடிக்கையாகும். அதன் அடிப்படையில் ஆண்டுதோறும் இம்மருத்துவமனைக்காக கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற தொடர் முயற்சிகள் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு தொடர்ந்து இம்மருத்துவமனையின் தரம் உயர்த்தப்பட்டு வருகிறது.

எடுக்கப்பட்டுள்ளது. அது செயல்படுத்தப்பட்டதா என்பதை அறிய குழு விரும்புகிறது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
9	24	70	ஒமியோபதி மருத்துவத்திற்காகவும் அதன் முன்னேற்றத்திற்காகவும் குறிப்பிடத்தக்க அளவில் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்றும் எனவே வரும் நிதி ஆண்டிலிருந்து ஒமியோபதி மருத்துவத்துறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்றும் அரசு வட்டார மருத்துவமனைகளில் ஒமியோபதி மருத்துவப் பிரிவினை ஏற்படுத்துவதற்கு துறை விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
தமிழ்நாட்டில் ஒமியோபதி மருத்துவம் இத்துறையின் கீழ் படிப்படியாக சீரான வளர்ச்சி கண்டு வருகிறது. ஆண்டு தோறும் ஒமியோபதிக்கான நிதி ஒதுக்கீடும் உயர்ந்து வருகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒமியோபதி மருத்துவத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு விபரம் ஆண்டு வாரியாக	அரசு வட்டார மருத்துவமனைகளில் ஒமியோபதி மருத்துவப் பிரிவு ஏற்படுத்த அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய விவரத்தை அறிய குழு விரும்புகிறது.

2014–15	–	ரூ.9.71 கோடி
2015–16	–	ரூ.9.86 கோடி
2016–17	–	ரூ.10.42 கோடி
2017–18	–	ரூ.10.79 கோடி
2018–19	–	ரூ.13.85 கோடி

ஒமியோபதி மருத்துவத்தின் முன்னேற்றத்திற்கான அனைத்து முயற்சிகளும் இத்துறையால் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகிறது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
10	25	72	குடும்ப நல அறுவை சிகிச்சை செய்யும் பெண்களுக்கான காப்பீட்டுறுதித் திட்டத்தை அரசு முழு அளவில் ஏற்று நடத்த வேண்டுமென்றும் இத்திட்டத்திற்கென்று தனியாக ஒரு மூல நிதி உருவாக்கப்படுவது அவசியம் என்பதால் துறையின் கருத்துருவிற்கு நிதித்துறையின் ஒப்புதல் விரைவில் பெறப்பட வேண்டும் என்றும் இது குறித்த அறிக்கை குழுவிற்கு அளிக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
குடும்ப நல அறுவை சிகிச்சை செய்யும் பெண்களுக்கான காப்பீட்டுறுதி திட்டத்தை உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி மைய அரசு நிதி உதவியுடன் அனைத்து மாநிலங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் அரசாணை எண்.183, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஆர்1) துறை, நாள் 11.9.2006ன்படி இத்திட்டம் 29.11.2005 முதல் இதுநாள் வரை செயல்படுத்தப்பட்டு வருகின்றது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்றவர்களின் எண்ணிக்கை, மேற்படி திட்டம் செயல்படுத்தப்படும் முன்னர் Miscellaneous purpose contingency fund–இன் மூலம் பயன்பெற்றவர்களின் எண்ணிக்கை, மற்றும் அரசாணையின் பத்தி 3(iii)a,b,e மற்றும் f–இன் மீதும், 3(iv)–இன் மீதும் துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்தும் மற்றும் பத்தி 4–இல் தெரிவிக்கப்பட்டுள்ள நடவடிக்கை குறித்து துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து ஓர் அறிக்கையாக குழுவிற்கு அனுப்பிவைக்கப்பெறவேண்டும் என்று குழு மீண்டும் பரிந்துரை செய்கிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	குழுவின் குறிப்புரை (6)
11	26	74	உயிர் காக்கும் மருந்துகளைத் தயாரிக்க வேண்டிய மருந்து நிறுவனங்கள் போலி மற்றும் தரமற்ற மருத்துகளை தயாரிப்பது கண்டுபிடிக்கப்பட்டால் அந்த நிறுவனங்கள் மீது கிரிமினல் நடவடிக்கை விரைவில் எடுக்கப்பட வேண்டும் என்றும் போலி மருந்துகளை தயாரித்தவர்களின் விவரங்கள் மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படும் வகையில் அரசிதழ்களில் பொது மக்களுக்கு தெரியும் வகையில் வெளியிடப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.	
			துறையின் பதில் (5)	
			மருந்தாய்வாளர்கள் நீதிமன்றங்களில் குற்ற வழக்கு பதிவு செய்து, குற்றவாளிக்கு தண்டனை அளிக்கப்பட்டவுடன், மருந்தாய்வாளரின் வேண்டுகோளின்படி, மருந்து மற்றும் அழகு சாதனப்பொருட்கள் சட்டம் 1940 பிரிவு 35–ன் படி, குற்றவாளிக்கு அளித்த தண்டனை விவரத்தை தினசரி செய்தித்தாள்களில் வெளியிட நீதிமன்றம் நடவடிக்கை எடுக்கிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	இது போன்ற குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு தண்டிக்கப்பட்டோர் விவரத்தை அறிய குழு விரும்புகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	குழுவின் குறிப்புரை (6)
12	28	79	மருந்து மற்றும் மாந்தரீக நிறுவனங்கள் (ஆட்சேபணைக்குரிய விளம்பரங்கள்) சட்டத்தின் கீழ் நிலுவையாக உள்ள நீதிமன்ற வழக்குகளை விரைவில் முடிப்பதற்கு துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.	
			துறையின் பதில் (5)	
			இந்த இயக்குனரகம் மருந்து மற்றும் மாந்தரீக சட்டத்தின் கீழ் ஆட்சேபணைக்குரிய விளம்பரம் செய்வோர்கள் மீது குற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் வழக்குகள் தொடரப்பட்டு நீதிமன்றங்களில் வழக்குகளை விரைவாக முடிக்க Lok adalat மூலம் நடவடிக்கை எடுத்து வருகிறது. 2006 முதல் இந்நாள் வரை உள்ள மருந்து மற்றும் மாயாஜால (தடை செய்யப்பட்ட விளம்பரங்கள்) சட்டத்தின் கீழ் சுமார் 150 வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது அதில் சுமார் 120 வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	120 வழக்குகளில் தண்டிக்கப்பட்டோர் விவரங்களை அறிய குழு விழைகிறது. மேலும் நிலுவையில் உள்ள வழக்குகளின் விவரங்களையும் அறிய குழு விழைகிறது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
13	29	82	மருந்து கட்டுப்பாடு வாரியத்தில் நீண்ட காலமாக நிரப்பப்படாமல் உள்ள இயக்குநர் காலிப் பணியிடத்தை விரைவில் நிரப்புவதற்கும் பணியாளர் காலியிடங்களில் போதிய பணியாளர்களை நியமிப்பதற்கும் உடனடி நடவடிக்கைகள் துறை மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இதுகுறித்த அறிக்கை ஒன்றினை விரைவில் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
புதிதாக 89 மருந்து ஆய்வாளர்களை 2012–ம் ஆண்டு நியமனம் செய்யப்பட்டுள்ளது. தற்போது 40 மருந்து ஆய்வாளர்கள் பணியிடங்களை நியமனம் செய்ய தமிழ்நாடு அரசு தேர்வாணையம் நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும் 12 இளநிலை மருந்துகள் பகுப்பாய்வாளர்கள் தேர்வு செய்யப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டவுள்ளது. 9 பகுப்பாய்வாளர் பணியிடங்களை நியமனம் செய்ய தமிழ்நாடு அரசு தேர்வாணையம் நடவடிக்கை எடுத்துள்ளது. அரசு பகுப்பாய்வு கூடத்தில் புதிய அதி நவீன உபகரணங்கள் வாங்க சுமார் 14–கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதனை கொள்முதல் செய்து, பகுப்பாய்வுகூடம் நவீனமயம் செய்யப்பட்டது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	குழு பரிந்துரையின் ஒரு பகுதியான நீண்ட நாட்களாக நிரப்பப்படாமல் உள்ள மருந்து கட்டுப்பாடு வாரியத்தின் இயக்குநர் பதவியினை நிரப்பப்படவேண்டும் என்பதே ஆகும். எனினும் துறையால் இது குறித்த தகவல் எதனையும் தெரிவிக்கப்படவில்லை. எனவே, இது குறித்து துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த ஒரு அறிக்கையினை குழுவிற்கு அனுப்பிவைக்கப்பெறவேண்டும் என குழு மீண்டும் பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
14	31	90	சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சிறுநீரக அறுவை சிகிச்சைப் பிரிவிற்கு கூடுதலாக 60 படுக்கை வசதிகள் அமைக்கப்படுவதற்கு துறையின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அதிக எண்ணிக்கையிலான நோயாளிகள் சிகிச்சைப் பெறுவதைக் கருதி மேலும், ஒரு மருத்துவர் குழு இப்பிரிவிற்கு நியமிக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			மேற்கண்ட சிறுநீரக சிகிச்சைக்கான அடங்கிய மருத்துவக்குழு இதுவரை 792 அறுவை சிகிச்சைகள் முதலமைச்சர் விரிவான காப்பீட்டு திட்டத்தின் கீழ் சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் தற்போது இத்துறையை விரிவு படுத்த அரசு உயர் சிறப்பு சிகிச்சை கட்டிடத்தை கட்ட அரசாணை எண்.378, சுகாதாரம், நாள்.03.12.2014 ரூ.75 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு அக்கட்டிடத்திற்கு தேவையான கூடுதல் படுக்கை வசதிகளுடன் செய்திட கூடுதலாக அரசு ரூ.9.92 கோடி அரசாணை எண்.82, சுகாதாரம் நாள்.14.03.2018ல் வழங்கப்பட்டு அப்பணிகள் நடைபெற்று வருகிறது என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	அரசாணை எண் 378 மற்றும் 82–இல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து பணிகள் முடிக்கப்பெற்று அது குறித்து அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பிவைக்கப்பெறவேண்டும் என்று குழு விரும்புகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
15	37	109	சென்னை ஈஞ்சம்பாக்கம் புறநகர் மகப்பேறு மருத்துவமனைக்கு புதிய கட்டிடம் கட்டப் பெறுவது குறித்த அறிக்கை விரைவில் குழுவிற்கு அனுப்பப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
சென்னை ஈஞ்சம்பாக்கம் அரசு புறநகர் மருத்துவமனையை விரிவுபடுத்தவும் மற்றும் கூடுதல் கட்டிடம் கட்டவும் இணை இயக்குநர் நலப்பணிகள், காஞ்சிபுரம் அவர்களிடமிருந்து அறிக்கை கோரப்பட்டுள்ளது. அறிக்கை கிடைக்கப்பட்டவுடன் அரசிற்கு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	இப்பரிந்துரை குழுவால் 2003–2005 ஆம் ஆண்டு செய்யப்பட்டதாகும். குழுவின் அறிக்கை 4.4.2005–ஆம் நாளன்று பேரவைக்கு அளிக்கப்பட்டது. எனினும், துறையால் சுமார் பதினான்கு ஆண்டுகள் கடந்த நிலையில் பரிந்துரைக்கு தெரிவித்த பதில் குழுவால் ஏற்றுக்கொள்ளும் நிலையில் அமையவில்லை என்றே குழு கருதுகிறது. மேலும்

குழுவால் குறிப்பிடப்பட்டுள்ள புறநகர் மகப்பேறு மருத்துவமனை தற்போது விரிவுபடுத்தப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட எல்லையில் அமைந்துள்ளது என்று குழு கருதுகிறது. இந்நிலையில் மேற்படி மருத்துவமனைக்கான முன்மொழிவுகள் யாரால் அனுப்பிவைக்கப்பெறவேண்டும் என்றும், குழுவின் பரிந்துரையினை செயல்படுத்த மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையினை குழுவிற்கு அறிக்கையாக அனுப்பிவைக்கப்பெறவேண்டும் என்று மீண்டும் பரிந்துரை செய்கிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
16	39	117	கடலூர், அரசு மருத்துவமனைக்கு பழைய கட்டிடத்திற்கு பதிலாக புதிய கட்டிடம் கட்டப்பட வேண்டும் என்றும், கூடுதல் படுக்கை வசதி ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

		துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
		கடலூர், அரசு தலைமை மருத்துவமனைக்கு பழைய கட்டிடத்திற்கு பதிலாக புதிய கட்டிடங்கள் கூடுதல் படுக்கை வசதிகளுடன் கட்டப்பட்டு பணி முடிவடைந்துள்ளது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டடங்கள், கட்ட வழங்கப்பட்ட நிருவாக ஒப்புதல், அளிக்கப்பட்ட அரசாணை எண், அதன் மதிப்பீடு மற்றும் பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளதா என்பது குறித்த ஒரு அறிக்கையினை குழுவிற்கு அனுப்பிவைக்கப்பெறவேண்டும் என்று குழு மீண்டும் பரிந்துரை செய்கிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
17	47	139	செஞ்சி அரசு மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர்கள் தங்குவதற்கு மருத்துவர் குடியிருப்புகள் கட்டப்பட வேண்டும் என்றும் இது குறித்து உரிய நடவடிக்கை விரைவில் எடுக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

		துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
		அரசு மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர்கள் தங்குவதற்கு மருத்துவர் குடியிருப்புகள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	குழு பரிந்துரை செய்து பதினான்கு வருடம் கழிந்த நிலையில், துறையின் பதில் ஏற்கும் நிலையில் இல்லை. மருத்துவர்கள் தங்குவதற்கான மருத்துவர் குடியிருப்புகள் கட்ட துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து ஓர் அறிக்கையை குழுவிற்கு அளிக்கவேண்டும் என, குழு மீண்டும் பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
18	51	151	ஈரோடு அரசு தலைமை மருத்துவமனை உட்பட ஈரோடு மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவமனைப் பணியாளர்கள் மருத்துவமனைக் குடியிருப்பில் தங்குவது குறித்து ஆய்வு செய்யப்பட வேண்டும் என்றும் மருத்துவர்கள் மற்றும் இதரப் பணியாளர்களின் விருப்பத்திற்கேற்ப மருத்துவர்கள் குடியிருப்புகளை கட்டுவதற்கும், மருத்துவமனைகளுக்கும் கூடுதல் கட்டிடங்கள் ஆர்.சி.எஸ். திட்டத்தில் கட்டப்படுவதற்கும் துறையின் மூலம் விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
ஈரோடு மாவட்டம், அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தில் உள்ள இணை இயக்குநர் நலப்பணிகள் அவர்கள் குடியிருப்பு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மருத்துவமனைக் கண்காணிப்பாளர் மற்றும் உறைவிட மருத்துவ அலுவலர் ஆகிய இரண்டு குடியிருப்புகள் பொதுப் பணித்துறையினரால் ஆய்வு செய்யப்பட்டு பயன்படுத்த இயலாது என அறிக்கை அளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து DEIC (District Early Intervention Centre) கட்டிடப் பணிக்காக இடிக்கப்பட்டு அவ்விடத்தில் தற்போது புதிய கட்டிடப் பணி நடைபெற்று வருகிறது. பவானி, பெருந்துறை, கவுந்தப்பாடி, கொடுமுடி அரசு மருத்துவமனைகளில் உள்ள மருத்துவமனைக் குடியிருப்புகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	மருத்துவமனைக் கண்காணிப்பாளர் மற்றும் உறைவிட மருத்துவ அலுவலர் ஆகிய குடியிருப்புகள் கட்டும் பணியின் தற்போதைய நிலை, அதன் மதிப்பீடு , நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்ட அரசாணை மற்றும் பணி முடிவடையும் காலம் ஆகியவற்றை துறை தெரிவிக்கவேண்டும் என்று குழு மீண்டும் பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
19	52	153	ஈரோடு மாவட்டம் வெள்ளக்கோயில் அரசு மருத்துவமனைக்கு சுற்றுச்சுவர் கட்டப்பட வேண்டும் என்றும் இதனை ஒரு சிறப்பு நேர்வாகக் கருதி இம்மருத்துவமனை சுற்றுச்சுவர் கட்டப்படுவதற்கு துறை உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
திருப்பூர் மாவட்டம், வெள்ளக்கோயில் ஊராட்சி ஒன்றியத்தில் வெள்ளக்கோயில் பிராதான/ மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வெள்ளக்கோயில் பிரதான/ மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தின் மேற்கு திசையில் சுற்றுச்சுவர் கட்டப்பட்டுள்ளது. மீதமுள்ள கிழக்கு, வடக்கு தெற்கு திசைகளில் சுற்றுச்சுவர் கட்டித்தர திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்த திரு.L.A. கிருஷ்ணசெட்டியாரின் 4வது தலைமுறையினர் ஒப்புதல் அளித்துள்ளனர். மேலும் நோயாளி நலச்சங்கத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மேல் குறிப்பிட்ட தனியார் பங்களிப்பு நிதி மூலம் வெள்ளக்கோவில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.	மேற்படி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்டுவதற்கு அரசின் பங்களிப்புத் தொகை மற்றும் தனியார் பங்களிப்புத் தொகை குறித்தும் மற்றும் பணியின் தற்போதைய நிலையினை துறை தெரிவிக்கவேண்டும் என குழு மீண்டும் பரிந்துரை செய்கிறது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
20	55	161	சேலம் மாவட்டம், எடப்பாடி வட்ட அரசு மருத்துவமனைக்கு அதிக நோயாளிகள் வருவதைக் கருத்திற்கொண்டு பெண் மருத்துவர் ஒருவரை அம்மருத்துவமனையில் நியமிக்க உடனடியாக துறையின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
சேலம் மாவட்டம், எடப்பாடி, அரசு மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவர் இல்லை. மேலும் தற்போது ஜலகண்டாபுரம், அரசு மருத்துவமனையில் இருந்து மகப்பேறு மருத்துவர் முகமைப்பணியில் பணிபுரிகின்றார். பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு மகப்பேறு மருத்துவரை நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.	சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு உடனடியாக பெண் மருத்துவரை நியமிக்குமாறு குழு பரிந்துரை செய்துள்ளது. கூடிய விரைவில் பெண் மருத்துவரை நியமிக்குமாறு குழு மீண்டும் பரிந்துரை செய்கிறது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
21	60	179	தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் மருத்துவமனைக் கட்டிடம் மிகவும் மோசமாக பழுதடைந்த நிலையில் உள்ளதால், அக்கட்டிடத்தை இடித்துவிட்டு புதிதாக அறுவை சிகிச்சை அரங்கம் உட்பட அனைத்துப் பிரிவுகளையும் ஏற்படுத்தும் வகையில் புதிய பெரிய கட்டிடம் ஒன்று கட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். ஸ்ரீவைகுண்டம் மருத்துவமனைக்கு தேவையான 11 சென்ட் நிலத்தைப் பெறுவதற்கும் விரைவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
தூத்துக்குடி மாவட்டம், அரசு மருத்துவமனை ஸ்ரீவைகுண்டத்தில் அரசாணை எண்.146, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை நாள்.19.05.2009 வாயிலாக ரூ.57.50 இலட்சம் மதிப்பீட்டில் அறுவை அரங்கம் மற்றும் அரசாணை எண்.281, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள். 16.09.2014 வாயிலாக ரூ.140 இலட்சம் மதிப்பீட்டில் மகப்பேறு பிரிவு ஆகியவை புதிதாக கட்டப்பட்டுள்ளது. ஸ்ரீவைகுண்டம் பேரூராட்சிக்கு சொந்தமான புல எண்.1121/2ஏ–இல் பரப்பு 0.045.0 ஹெக்டேர் புன்செய் நிலத்தினை ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனையின் பயன்பாட்டிற்கு இலவசமாக வழங்க ஸ்ரீவைகுண்டம் பேரூராட்சியில் முடிவு செய்யப்பட்டு, தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்நிலத்தினை நிலக்கிரயமின்றி நிலமாற்றம் செய்ய ஆவன செய்யும்படி உரிய கருத்துருவானது திருவைகுண்டம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடமிருந்து பெறப்பட்டு, திருநெல்வேலி மண்டலம் பேரூராட்சிகள் உதவி இயக்குநரால் (திருநெல்வேலி மண்டலம், பேரூராட்சிகள், உதவி இயக்குநரின் கடித ந.க.எண்.2791/2015/ப3, நாள் 10.08.2015 வாயிலாக) சென்னை–600 108, பேரூராட்சிகள் இயக்ககம், இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. தற்போது திருவைகுண்டம் அரசு மருத்துவமனையின் விரிவாக்கம் மற்றும் புதிய கட்டிடங்கள் கட்ட மேற்படி மருத்துவமனையின் அருகிலுள்ள நிலத்தினை திருவைகுண்டம் அரசு மருத்துவமனைக்கு பொது மக்களின் நலன் கருதி வழங்கிட, மேற்கண்ட கடிதம் வாயிலாக அனுப்பப்பட்ட கருத்துருவினை பரிசீலனை செய்து உரிய ஆணை பேரூராட்சிகளின் ஆணையர் சென்னை அவர்களின் ஆணை எதிர்நோக்கப்படுகிறது என்பதை அரசுக்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	துறை பரிசீலனையில் உள்ள கருத்துருவிற்கு பேரூராட்சிகளின் ஆணையரின் ஆணையினை பெற்று மருத்துவமனை கட்டடம் கட்டுவதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளவேண்டும் என்று குழு மீண்டும் பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
22	66	191	வீரநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் துறையின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.	திருநெல்வேலி மாவட்டம் சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியத்தில் வீரநல்லூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. வீரநல்லூர் கூடுதல் ஆரம்ப நிலையக் கட்டடம் நல்ல நிலையில் உள்ளது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	மேற்படி ஆரம்ப சுகாதார நிலையத்தினை மாவட்டத்தில் உள்ள பொதுப்பணித் துறை (கட்டடங்கள்) ஆய்வு செய்து அது குறித்த அறிக்கையினை குழுவிற்கு அனுப்பிவைக்கப்பெறவேண்டும் என்று குழு மீண்டும் பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
23	67	193	பாளையங்கோட்டை அரசு மருத்துவமனையில் புற்றுநோய் மருந்துகள் வழங்கப்படாததற்கு காரணமானவர்கள் மீது துறை நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் மருந்துகள் மருத்துவமனையில் வழங்கப்படுவது செயலாளர் அளவில் மாதந்தோறும் ஆய்வு செய்யப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.	புற்றுநோய் மருத்துவ சிகிச்சை துறை 2014 ஆம் ஆண்டுகளில் துவங்கப்பட்டு புற்றுநோய் நோயாளர்களுக்கு அனைத்து மருந்துகளும் கிடைக்கும் வகையில் செயல்பட்டு வருகிறது. மேலும் கதிரியக்க புற்றுநோய் சிகிச்சை பிரிவில் புற்றுநோய் நோயாளிகளுக்கு கதிரியக்க சிகிச்சையும், மருந்து சிகிச்சையும் தங்கு தடையின்றி கிடைக்கும் வகையில் யாருக்கும் சிகிச்சை மறுக்கப்படவில்லை என்பது தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. எனவே, மேற்கண்ட பதிலினை ஏற்று பத்தியினை தடைநீக்கம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	குழு பரிந்துரையானது 2003–2005 ஆம் ஆண்டில் செய்யப்பட்டுள்ளது. எனினும் துறை 2014–ஆம் ஆண்டில் புற்றுநோய் மருத்துவ சிகிச்சை பிரிவு துவங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குழுவின் பரிந்துரைக்கு பொருத்தமான பதில் தெரிவிக்கப்படவில்லை என்றே குழு கருதுகிறது. எனவே துறை உரிய விவரங்கள் குழுவிற்கு தெரிவிக்கவேண்டும் என்று மீண்டும் பரிந்துரை செய்கிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
24	71	203	தென்காசி அரசு மருத்துவமனையில் வரும் நிதியாண்டில் தீக்காயம் சிகிச்சைப் பிரிவிற்கு தனி வார்டு அமைக்கவும் இரத்த வங்கிக்கு புதிய கட்டிடம் கட்டப்படுவதற்கும் துறை உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் MP நிதி மூலம் நிதி ரூ.10 இலட்சம் பெற்று இரத்த வங்கி கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. தீக்காய வார்டு அமைத்திட உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	தென்காசி அரசு மருத்துவமனையில் தீக்காயச் சிகிச்சைப் பிரிவிற்கு தனிவார்டு அமைத்து தர குழு மீண்டும் பரிந்துரை செய்கிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
25	82	236	விராலிமலை அரசு மருத்துவமனைக்கு மருத்துவ அலுவலர் அறை, ஆய்வுக் கூடம், சேமிப்பு கிடங்கு ஆகியவற்றிற்கான புது கட்டிடத்தை கட்டுவதற்கும் எச்.எஸ்.டி.பி திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் சுற்றுச் சுவர் கட்டப்படுவதற்கும் துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
விராலிமலை அரசு மருத்துவமனையில் தற்பொழுது பழுதடைந்துள்ள பணியாளர்கள் குடியிருப்பில் மருத்துவ அலுவலர் அறை மற்றும் சேமிப்புக் கிடங்கு உள்ளது. ஆய்வுக் கூடம் புறநோயாளிகள் பிரிவு கட்டடத்தில் உள்ளது. மருத்துவ அலுவலர் அறை, ஆய்வுக் கூடம், சேமிப்புக் கிடங்கு ஆகியவற்றிற்கு புதிய கட்டடம் கட்டப்படவில்லை. மேலும் மருத்துவமனையைச் சுற்றி சுற்றுசுவர் கட்டுவதற்கு ரூ.85 இலட்சத்திற்கான திட்ட மதிப்பீடு அறிக்கை பொதுப் பணி துறை மூலம் மேல் நடவடிக்கைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	குழுவின் பரிந்துரையினை செயல்படுத்த துறை உரிய நடவடிக்கையினை எடுக்கப்பெறவேண்டும் என்று குழு மீண்டும் பரிந்துரை செய்கிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
26	86	247	புதுக்கோட்டை அரசு பொது மருத்துவமனையில் தீக்காயச் சிகிச்சைப் பிரிவு ஐ.சி வார்டு, மனநிலை நோயாளிகள் வார்டு போன்ற பிரிவுகளை ஏற்படுத்துவதற்கு விரைவாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் இப்பிரிவுகளை அமைப்பதற்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.	அரசாணை எண்.342, நாள் 19.11.2015–இன் படி புதுக்கோட்டை அரசு தலைமை மருத்துவமனையானது அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு முள்ளூர் என்ற இடத்தில் புதிதாக கட்டடங்கள் கட்டப்பட்டு மருத்துவக்கல்வி இயக்ககத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	தற்பொழுது புதிதாக கட்டடங்கள் கட்டப்பட்டு மருத்துவக் கல்வி இயக்கத்தின் கீழ் செயல்பட்டு வரும் தரம் உயர்த்தப்பட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், குழு பரிந்துரை செய்த தீக்காயச் சிகிச்சைப்பிரிவு ஐ.சி வார்டு மனநிலை நோயாளிகள் வார்டு போன்ற பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்ற விவரத்தினை குழுவிற்கு தெரிவிக்கவேண்டுமென குழு விரும்புகிறது.
27	90	260	திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் நீண்ட காலமாக காலியாக உள்ள மகப்பேறு மருத்துவர், மயக்க மருத்துவர், எலும்பு முறிவு மருத்துவர், இருதய சிகிச்சை மருத்துவர், நரம்பியல் மற்றும் தோல் சிகிச்சை ஆகியவற்றிற்கான மருத்துவர்கள் முன்னுரிமை அடிப்படையில் விரைவில் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.		

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனை 124 படுக்கை வசதிகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு 805 வெளிநோயாளிகளும், 33 உள்நோயாளிகளும், 2 பிரசவங்களும் நடைபெற்று வருகின்றன. மேலும், எக்ஸ்ரே, இசிஜி, ஆல்ட்ராசவுண்ட் ஸ்கேன், முழுமையான ஆய்வுக்கூடம், மகப்பேறுபிரிவு, ஒருங்கிணைந்த மகப்பேறு மற்றும் குழந்தைகள் பிரிவு, தொற்றாநோய், பிணவறை ஆகிய பிரிவுகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையின் Bed Occupancy Rate 87 ஆக உள்ளது. மேலும் இங்கு ஒப்பளிக்கப்பட்ட 19 மருத்துவர்களில் 12 மருத்துவர்களும், 2 குழந்தை நல மருத்துவர்களும், 2 மகப்பேறு மருத்துவர்களும், 2 மயக்கவியல் மருத்துவர்களும், 1 General Medical (MD) 1 Physiology (MD) மருத்துவரும், 3 MBBS மருத்துவரும், 1 காது, மூக்கு, தொண்டை மருத்துவர் பணியில் உள்ளனர். 22 செவிலியர்களும், 15 மருத்துவசார் நிலைப் பணியாளர்களில் 11 பேரும், 10 மருத்துவமனை பணியாளர்களும் பணியில் உள்ளனர். அரசாணை எண்.239, சுகாதாரம் நாள்.10.07.1970ல் காது, மூக்கு, தொண்டை பணியிடமும், அரசாணை எண்.287, சுகாதாரம் நாள்.05.06.1988ல் தோல்நோய் சிகிச்சை நிபுணர் மருத்துவர் பணியிடமும் தோற்று விக்கப்பட்டுள்ளது. தற்போது இங்கு காது,மூக்கு, தொண்டைநிபுணர் 05.07.2019 முதல் நியமிக்கப்பட்டு, இம்மருத்துவமனையில் பணிபுரிந்து வருகிறார். மேலும், இம்மருத்துவமனையில் மாதந்தோறும் சராசியாக 100 முதல் 125 நபர்களுக்கு காது, மூக்கு, தொண்டை சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என்பதை அரசுக்கு கனிவுடன் தெரிவித்துக் கொள்வதோடு, காலியாக உள்ள தோல்நோய் மருத்துவர் பணியிடம் எதிர்வரும் கலந்தாய்வின் மூலம் நிரப்பப்படும். (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	குழுவின் பரிந்துரையின்படி மகப்பேறு மருத்துவர், மயக்க மருத்துவர் ஆகிய மருத்துவர் பணியிடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டுள்ளதாக குழு அறிகிறது. எலும்பு முறிவு மருத்துவர், இருதய சிகிச்சை மருத்துவர், நரம்பியல் மருத்துவர் மற்றும் தோல் சிகிச்சை ஆகிய மருத்துவர்கள் பணியிடங்கள் நிரப்பப்பட்டது குறித்து குழுவிற்கு ஒரு அறிக்கையினை துறை அனுப்பிவைக்கப்பெறவேண்டும் என்று குழு மீண்டும் பரிந்துரை செய்கிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
28	92	265	திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனைக்கு பரந்த இடம் அதிக அளவு இல்லை என்பதைக் கருதியும் உலக வங்கி உதவியுடன் இரண்டாம் கட்ட மருத்துவமனை மேம்பாட்டுத் திட்டத்தில் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்ய வாய்ப்புள்ளது என்பதைக் கருதியும் விவசாய நோயாளிகளின் நலன் கருதியும், 3 அல்லது 4 மாடிகள் வரை உள்ள பெரிய மருத்துவமனைக் கட்டடம் கட்டப்படுவதற்கு துறை மூலம் சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் இக்கட்டடத்தில் நவீன அறுவைச் சிகிச்சை அரங்கம், நவீன சமையற்கூடம், குழந்தைகள் சிகிச்சைப்பிரிவு, விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகள் அமைக்கப்பட வேண்டும் என்றும் இத்திட்டப் பணிகள் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. மேலும் இம்மருத்துவமனையில் அணுகு சாலையை தார்சாலையாக மாற்றுவதற்கும் பிணவறைக் கட்டடம் அமைப்பதற்கும் விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனைக்கு 15–வது நிதிக்குழுவில் அரசுக்கு அனுப்பிய முன்மொழிவில் கூடுதல் கட்டிடங்கள் கட்ட ரூ.3.00 கோடிக்கு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அரசின் ஒப்புதல் கிடைத்த பின் கட்டிடப்பணிகள் துவக்கப்படும். (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	முன்மொழிவுகளின் தற்போதைய நிலை, கோரிய நிதி பெறப்பட்டதா என்பதையும், மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகள் குறித்தும், செலவினம் குறித்து குழுவிற்கு அறிக்கையாக அனுப்பிவைக்கப்பெறவேண்டும் என்று குழு மீண்டும் பரிந்துரை செய்கிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
29	93	269	இந்து சமய அறநிலையத் துறைக்கு செலுத்தப்பட வேண்டிய கோவில் நிலத்தின் மதிப்புத் தொகையை வழங்க துறைச் செயலாளர் குழுவிற்கு உறுதி அளித்தவாறு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் மேற்கொண்டும் கூடுதல் நிலத்தினை திருத்துறை பூண்டி அரசு மருத்துவமனை பெற உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			இந்து சமய அறநிலையத் துறைக்கு செலுத்தப்பட வேண்டிய நிலத்தின் மதிப்புத்தொகை 91,99,218.60/– 25.03.2006ல் முழுவதும் செலுத்தப்பட்டு விட்டது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	அரசு கணக்கில் செலுத்தப்பட்ட விவரங்களை குழுவிற்கு அனுப்பிவைக்கப் பெறவேண்டும் என்று மீண்டும் பரிந்துரை செய்கிறது.
வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	
30	94	272	திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் ஆக்கிரமிப்பு நிலத்தினை உடனடியாக கையகப்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் மருத்துவமனை சுற்றுச்சுவர் கட்டிமுடிப்பதற்கும் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இதுபற்றிய அறிக்கையை விரைவில் குழுவிற்கு அனுப்பப்படவேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.	
			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			மருத்துவமனை திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் ஆக்கிரமிப்பு நிலங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், மருத்துவமனை சுற்று சுவர் கட்டப்பட்டுள்ளது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	குழுவின் பரிந்துரையானது 2003–2005 ஆம் ஆண்டில் செய்யப்பட்டு, அது தொடர்பான அறிக்கையினை 4.4.2005 அன்று பேரவையில் அளிக்கப்பட்டது. அறிக்கையினை பேரவைக்கு அளிக்கப்பட்டு சுமார் பதினான்கு ஆண்டுகள் கடந்த நிலையில் துறையால் தெரிவிக்கப்பட்ட பதில் எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளும் வகையில் அமையவில்லை. துறையால் இத்தகைய பதில் அளித்ததற்கு குழு தனது வருத்தத்தினை பதிவு செய்கிறது. எனவே, துறை இனிமேலும் காலம் தாழ்த்தாமல் உடனடியாக மருத்துவமனை வளாகத்திலிருந்து

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
31	99	287	நன்னிலம் அரசு மருத்துவமனைக்கு போதிய இடவசதி இருந்தும் மருத்துவர்கள் மற்றும் மருத்துவ வசதிகள் இல்லாததால் பொது மக்களின் நலன் கருதி இம்மருத்துவமனையை தரம் உயர்த்தபட வேண்டும் என்றும் இதற்கான நடவடிக்கையினை துறை விரைவாக எடுக்க வேண்டும் என்றும் இது குறித்த அறிக்கை குழுவிற்கு அனுப்பப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.	நன்னிலம் அரசு மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட 13 மருத்துவர்கள் பணியிடங்களில் 12 மருத்துவர்கள் பணியில் உள்ளனர். எஞ்சியுள்ள 1 காலிப்பணியிடம் எதிர்வரும் காலங்களில் பட்டயபடிப்பு முடித்த மருத்துவர்கள் மூலமும் நிரப்பப்படுவார்கள். மேலும், புதிய மருத்துவ உபகரணங்களும் வழங்கப்பட்டு நோயாளிகள் பயன்பாட்டில் உள்ளது. மேலும் 15வது நிதிக்குழுவில் அரசுக்கு அனுப்பிய முன் மொழிவில் கூடுதல் கட்டிடங்கள் கட்ட ரூ.4.00 கோடிக்கு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அரசின் ஒப்புதல் கிடைத்த பின் அரசு மருத்துவமனை தரம் உயர்த்தப்படும்.	ஆக்கிரமிப்பினை அகற்றவேண்டும் என்று குழு மீண்டும் பரிந்துரை செய்கிறது. இப்பணியினை விரைவாக மேற்கொள்ளாவிட்டால் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறைரீதியான நடவடிக்கையினையும் மேற்கொள்ள நேரிடும் என்றும் குழு தனது கருத்தினை பதிவு செய்கிறது.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
32	113	324	வால்பாறை அரசு மருத்துவமனையில் சிறப்பு நேர்வாக கருதி சுற்றுச்சுவர் துறையின் மூலம் கட்டப்படவேண்டும் என்றும் துறைச் செயலாளர் உறுதியளித்தவாறு இப்பணி முடிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் இது குறித்த அறிக்கையினை குழுவிற்கு அனுப்பவேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
வால்பாறை மருத்துவமனைக்கு ஏற்கெனவே உள்ள சுற்றுச்சுவர் உயரம் குறைவாக உள்ளது. வன விலங்குகள் நடமாட்டம் உள்ளதால் ஏற்கெனவே உள்ள சுற்றுச் சுவரின் மீது புதிதாக கம்பிவலை பொருந்திய சுற்றுச்சுவர் மேம்படுத்தும் பணிகளுக்கான தோராய திட்ட மதிப்பீடு பொதுப்பணித் துறையினரிடம் கோரப்பட்டுள்ளது. பொதுப்பணித் துறையிடமிருந்து திட்ட மதிப்பீடு பெறப்பட்டவுடன், அதற்கான நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளப்படும். (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)	வால்பாறை அரசு மருத்துவமனையில் சுற்றுச்சுவர் கட்ட நிதி ஒதுக்கீடு பெற்று பணிகளை விரைந்து மேற்கொள்ளவேண்டுமென குழு மீண்டும் பரிந்துரை செய்கிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
33	121	345	கோயம்புத்தூர் மாவட்டம், ஆழியாறு ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்துவதற்கு பிரசவ வார்டு மற்றும் சுற்றுச்சுவர் கட்டப்பட வேண்டும் என்றும் பழுதுபார்ப்புப் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்
(5)

கோயம்புத்தூர் மாவட்டம் ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தில் ஆழியார் நகர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

ஆழியார் நகர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நான்கு புறமும் சுற்றுச்சுவர் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

ஆழியார் நகர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நடப்பு நிதியாண்டில் அனைவருக்கும் நல்வாழ்வு திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

ஆழியார் நகர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலைய உட்கட்டமைப்பு வசதியை மேம்படுத்துவதற்கு பிரசவ வார்டு கட்ட அனைவருக்கும் நல்வாழ்வு திட்டத்தின் மூலம் நிதி உதவி அளிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

(மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எஸ்2) துறையின் அ.சா.கு.எண் 38253/எஸ்2/2016–6, நாள் 29.10.2019)

குழுவின் குறிப்புரை
(6)

ஆழியார் நகர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு உரிய பராமரிப்பு பணிகள் மற்றும் பிரசவ வார்டு கட்டுவதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொண்டு அமைக்கப்பெறவேண்டும் என்று குழு மீண்டும் பரிந்துரை செய்கிறது.

கி. சீனிவாசன்,
செயலாளர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS